# மின்கதிர் செய்தி

தமிழ்நாடு மின்ஊழியர் மத்திய அமைப்பின் மாதஇதழ்

CENTRAL ORGANISATION OF TAMILNADU ELECTRICITY EMPLOYEES MONTHLY ISSUE

கதிர் 9

செய்தி 5

டிசம்பர் 2021

விலை ரூ 10/-





## அருமை தோழர் எஸ்.பஞ்சரத்னம் படத்திறப்பு – நினைவேந்தல் நிகழ்ச்சி 27.11.2021 – சென்னை

# மத்திய அமைப்பு திருவண்ணாமலை கிளையின்
# புதிய கூட்ட அரங்கம்
# கட்டிட அடிக்கல் நாட்டு விழா
# 7.11.2021












# மின்கதிர்
## செய்தி

தமிழ்நாடு
மின்ஊழியர் மத்திய
அமைப்பின்
மாத இதழ்

**விலை ரூ. 10/-**

**டிசம்பர் 2021**


**உள்ளே....**


- ★ மாற்றம் முக்கியம் அது நிச்சயம் சாத்தியம்
- ★ மக்களை காப்போம் தேசத்தை காப்போம்
- ★ கார்ப்பரேட்டுகளை வென்ற விவசாயிகள் போராட்டம்
- ★ வீரகாவியம் வெண்மணி தியாகம் போற்றுவோம்
- ★ பொறியாளர் அமைப்பின் மாநில மாநாடு
- ★ ஒழுங்கற்ற ஒழுங்கு
- ★ அகில இந்திய பொதுக்குழு முடிவுகள்
- ★ மின்வாரியமே வேலை வாய்ப்பை பறிக்காதே
- ★ பருவநிலை மாற்றமும் பூமிபந்தும்
- ★ கோடிகால் பூதமடா
- ★ கோமாளி ஆட்சியில்..



**ஆண்டு சந்தா ரூ. 100/-**
**ஆயுள் சந்தா ரூ. 1000/-**
**தனிப்பிரதி ரூ. 10/-**

**ஆசிரியர் குழு**

எஸ். இராஜேந்திரன்
டி. ஜெய்சங்கர்
எம். வெங்கடேசன்
வி. இளங்கோ
கே. ரவிச்சந்திரன்
எம். தனலட்சுமி

முகவரி
எண் 27, மசூதி தெரு,
சேப்பாக்கம், சென்னை 600 005.


# மாற்றம் முக்கியம்!
# அது நிச்சயம் சாத்தியம்!

உலக வரலாற்றில் நம் விவசாயிகள் நடத்திய போராட்டம், தொழிலாளர்கள் மத்தியில் கோரிக்கைகளுக்காக ஒன்றிணைந்து போராடினால் சாதிக்க முடியும் என்ற நம்பிக்கை விதையை விதைத்துள்ளனர். ஓராண்டு போராட்டம், 700-க்கும் மேற்பட்ட உயிர்கள் பலி, காவல்துறையின் லத்திக்கு வலியை சுமந்த விவசாயிகள், எத்தனை இடர்பாடுகள், இவற்றையெல்லாம் களைந்து மிகப்பெரிய வெற்றியை பெற்றுள்ளனர். நாட்டின் பிரதமர் விவசாயிகளிடம் மன்னிப்புக்கோரி பாராளுமன்றத்தில் மூன்று வேளாண் சட்டங்களையும் வாபஸ் பெறுவதற்கான சட்டத்தை நிறைவேற்றியுள்ளார்.வேளாண் சட்டத்தை நிறைவேற்றும் பொழுதும், தற்போது வாபஸ் பெறுகின்ற சட்டத்தை நிறைவேற்றும் பொழுதும் எந்த விவாதமும் நாடாளுமன்றத்தில் நடைபெறவில்லை. பல்வேறு மாநிலங்களில் நடைபெற்ற சட்டமன்ற, நாடாளுமன்ற இடைத்தேர்தலில் கிடைத்த தோல்வி தான் இதற்கு காரணம்.

ஒன்றிய அரசின் பெட்ரோல், டீசல், கேஸ் விலை உயர்வால் அனைத்து அத்தியாவசிய பொருட்களும் மின்சாரம் உள்ளிட்ட உற்பத்தியில் ஈடுபடும் தொழில்களுக்கான மூலப்பொருட்களின் விலையும் கனிசமாக உயர்ந்துள்ளது. டீசல் விலை உயர்வால் பொருட்களை ஓர் இடத்தில் இருந்து மற்றோர் இடத்திற்கு கொண்டு செல்ல கட்டண உயர்வால் பொருட்களின் விலையும் தாறுமாறாக உயர்ந்து வருகிறது. மக்களின் வாங்கும் சக்தி குறைகிறது. பாமரமக்களும் சிறு,குறு தொழில் உற்பத்தியாளர்களும் கடுமையாக பாதிக்கப்படுகின்றனர். ஒன்றிய அரசு கலால்வரி வசூலிப்பதை குறைக்காவிட்டால் பெட்ரோல், டீசல்,கேஸ் விலை உயர்வு குறைவதற்கான வாய்ப்பில்லை. ஆகவே, டிசம்பர் 10-ல் 10 நிமிடம் நண்பகல் 12.00 முதல் 12.10 வரை வாகனத்தை நிறுத்தும் போராட்டத்தில் பங்கேற்போம்.

இந்த தாக்குதலில் இருந்து உழைக்கும் வர்க்கம் தம்பித்துக்கொள்ள முயற்சிக்கும் போது தான் மழை வெள்ளத்தில் இருப்பிடம் இழந்து வாழ்வாதாரத்தை தொலைத்து மக்கள் நிற்கிறார்கள். இயற்கையின் நீர் நிலை வழிதடங்களை கடந்த 40 ஆண்டுகளாக ஆக்கிரமித்ததன் விளைவு மழை காலத்தில் மக்கள் தங்களது உடமைகளை தொலைத்து நிற்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. அதிகார வர்க்கம் எந்த பணிகளையும் செய்யாமல் வாய்சொல்லில்

வீரர்களாக கடந்த காலங்களில் வலம் வந்து கொண்டிருந்தார்கள். பாதிப்பு என்று வந்தால் ஆண்ட கட்சி, ஆளும் கட்சி என்ற வேறுபாடு கிடையாது. அனைத்து தரப்பு மக்களும் பாதிக்கப்படும் நிலைக்கு தள்ளப்படுகிறார்கள்.

இந்த புறச்சூழலில் இந்த பாராளுமன்ற கூட்டத்தொடரில் மின்சார சட்டத்திருத்த மசோதா 2021-ஐ அமலாக்குவதற்கான நடவடிக்கையில் ஒன்றிய அரசு ஈடுபட்டு வருகிறது. சட்டத்தை அமலாக்கி நிறைவேற்றுவதற்கு முன்பாக சட்டத்தில் கூறப்பட்ட சில விஷயங்களை மாநில மின்வாரியங்கள் மீது தானடித்த மூப்பாக திணிக்கிறது. விநியோக பிரிவிலுள்ள 33 கே.வி. துணை மின் நிலையங்களை தொடரமைப்பு கழகத்திற்கு ( TAN TRANSCO ) மாற்ற நிர்ப்பந்திக்கப்படுகிறது.

ஒன்றிய அரசின் இந்த நடவடிக்கை மின்வாரிய கட்டமைப்பை சீர்குலைக்கவே உதவும். இந்தியாவில் இன்னும் மின்சாரத்தை பார்க்காத பலநூறு கிராமங்கள் உள்ளது. மின் உற்பத்தியில், மின் விநியோகத்தில் தனியாரை ஈடுபடுத்தினால் மின்சாரம் சந்தைப் பொருளாக மாறும். தனியார் முதலாளிகள் கிராமப்புறங்களை நோக்கி செல்ல மாட்டார்கள். ஒன்றிய பி.ஜே.பி. அரசின் நவீன தாராளமயக் கொள்கை இந்திய மின்துறையை கோரதாண்டவம் ஆடி சீரழிக்கின்ற நிலைக்கு கொண்டு செல்வது தான் பி.ஜே.பி. அரசின் முக்கிய நிகழ்ச்சி நிரல்.

ரூபாய் ஆறு லட்சம் கோடி நிதியை திரட்ட பொதுதுறையை குத்தகைக்கு விட முடிவெடுத்துள்ள மோடி அரசின் நடவடிக்கையை தடுத்த நிறுத்திட உழைக்கும் வர்க்கம் குறிப்பாக மின்வாரிய ஊழியர்கள் ஒன்று திரள வேண்டிய அவசியம் இன்றைக்கு ஏற்பட்டுள்ளது.

கார்ப்பரேட்டுகளுக்கும் அதானி, அம்பானி வகையறாக்களுக்கும் மின்துறையை தாரை வார்த்து கொடுப்பதில் வேகமாக செயல்படும் இந்த அரசை தூக்கி எறியப்பட வேண்டும்.

தமிழகத்தில் திமுக தலைமையிலான அரசு பதவி ஏற்றதிலிருந்த மின்துறையில் வளர்ச்சிக்கான நடவடிக்கைகளில் கவனம் செலுத்த வேண்டும் என்ற எதிர்ப்பார்ப்பு இருந்தது. தமிழக முதல்வரால் திறந்து வைக்கப்பட்ட மின்னகம் இதன் செயல்பாட்டை மேம்படுத்த தொழிற்சங்கங்கள் தந்த ஆலோசனையை புறந்தள்ளி விட்டது. இந்த மின்னகத்தினால் வாரியத்தில் பணியாற்றும் களஉதவியாளரிலிருந்து மேற்பார்வை பொறியாளர் வரை கடுமையான மனச்சுமையோடு பணியாற்ற வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

பல்லாயிரக்கணக்கான காலிப்பணி இடங்கள் இருந்தும் நிரப்ப மறுப்பது நியாயமல்ல. அரசின் முன் மாதிரியாக செயல்பட வேண்டிய பொதுத்துறையில் அவுட்சோர்சிங் முறையும், Redeployment முறையும் புகுத்தப்படுவரை மின்வாரிய நிர்வாகமும், தமிழக அரசும் கைவிட வேண்டும். கடந்த ஆண்டு டிசம்பர் 21-ல் மின்வாரிய பணியாளர்கள் அவுட் சோர்சிங் முறைக்கு எதிராக போராடிய நிகழ்வுகள் கண் முன் உள்ளது.


மின்வாரியத்தில் மேற்பார்வை பொறியாளர் பதவியிலிருந்து உதவியாளர் பதவி வரை காலிப்பணி இடங்கள் இருந்தும் பதவி உயர்வுகள் மறுக்கப்பட்ட நிலையில் தொழிற்சங்க கூட்டு நடவடிக்கைக்குழு ஒன்றுபட்டு போராடி பதவி உயர்வுகளையும் இடமாறுதல்களையும் பெற வேண்டிய நிலைக்கு அரசும், வாரியமும் தொழிலாளர்களை தள்ளி உள்ளனர். இது தமிழக அரசின் மீது தொழிலாளர்களுக்கு அவநம்பிக்கையை ஏற்படுத்தும். ஆட்சியாளர்கள் கவனம் செலுத்துவார்கள் என நம்புவோம்!

எல்லா சாலைகளும் ரோம் நகரை நோக்கி என சொல்வார்கள். அது போல நமது எல்லா வாரிய சங்கங்களும், மின்வாரியத்தை பாதுகாக்க என்ற எண்ணத்தில் பயணம் செய்தால்...

**மாற்றம் முக்கியம்!**
**அது நிச்சயம் சாத்தியம்!!**

# மக்களைக் காப்போம் - தேசத்தை காப்போம்

# நாடு தழுவிய வேலை நிறுத்தம்



### மத்திய தொழிற்சங்க தேசிய சிறப்பு மாநாடு அறைகூவல்

"மக்களைக் காப்போம்; தேசத்தைக் காப்போம்" என்ற முழக்கத்துடன், மோடி அரசின் மக்கள்விரோத, தொழிலாளர் விரோத, விவசாய விரோத, தேசவிரோத கொள்கைகளை எதிர்த்து நாடு தழுவிய பொது வேலைநிறுத்தப் போராட்டத்தை 2022 பட்ஜெட் கூட்டத்தொடரின் போது நடத்துவதற்கு தயாராவீர் என்று இந்திய உழைப்பாளி மக்களுக்கு அனைத்து மத்திய தொழிற்சங்க தேசிய மாநாடு அறைகூவல் விடுத்துள்ளது. தேசிய தொழிலாளர் சிறப்பு மாநாடு நவம்பர் 11 வியாழனன்று தில்லி ஜந்தர் மந்தரில் நடைபெற்றது. அனைத்து மத்திய தொழிற்சங்கங்கள் மற்றும் துறைவாரி அகில இந்திய சங்கங்கள் மற்றும் சம்மேளனங்களின் கூட்டு மேடை சார்பில் நடைபெற்ற இந்த மாநாட்டிற்கு ஐஎன்டியுசி தலைவர் சஞ்சய் சிங், ஏஐடியுசி தலைவர் சுகுமார் தாம்லே, எச்எம்எஸ் தலைவர் ராஜா ஸ்ரீதர், சிஐடியு தலைவர் டாக்டர் கே.ஹேமலதா, ஏஐயுடியுசி தலைவர் ரமேஷ் பராசர், டியுசிசி தலைவர் சிவ் சங்கர், சேவா அமைப்பின் தலைவர் பரீதா ஜலீஷ், ஏஐசிசிடியு தலைவர் சைலேந்திர சர்மா, தொமுச தலைவர் ஆர்.கே.மவுரியா, யுடியுசி தலைவர் நசீம் உசேன் ஆகியோர் தலைமையேற்றனர்.

இம்மாநாடு, சில நாட்களுக்கு முன்பு காலமான தொமுச தலைவர் வி.சுப்பாராமன் உள்ளிட்டோரின் மறைவுக்கு அஞ்சலி செலுத்தியது. மாநாட்டில் சிஐடியு பொதுச் செயலாளர் தபன்சென், ஏஐடியுசி பொதுச் செயலாளர் அமர்ஜீத் கவுர் உள்ளிட்ட அனைத்து மத்திய தொழிற்சங்கங்களின் தலைவர்கள் உரையாற்றினர். நாட்டின் பொருளாதாரத்தையும் ஒட்டுமொத்த மக்களின் வாழ்வாதாரங்களையும் பேரழிவுக்குள் தள்ளியிருக்கும் ஒன்றிய மோடி அரசின் தொழிலாளர் விரோத - விவசாயிகள் விரோத - மக்கள் விரோத, கார்ப்பரேட்டுகளுக்கு ஆதரவான - தேசத்திற்கு விரோதமான கொள்கைகளின் கொடிய விளைவுகள் குறித்து தலைவர்கள் தங்களது உரையின்போது விவரித்தனர். இதற்கு எதிரான போராட்டம் என்பது, மக்களின் வாழ்வியலையும் வாழ்வாதாரங்களையும் பாதுகாப்பதற்கானது மட்டுமல்ல; நாட்டின் பொருளாதாரத்தையும் ஒட்டுமொத்த ஜனநாயகக் கட்டமைப்பையும் முழுமையாக பாதுகாப்பதற்கான நடவடிக்கைகள் ஆகும் எனக் குறிப்பிட்ட அவர்கள், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு தனியார் பெரும் கார்ப்பரேட் நிறுவனங்களின் தீவிர ஆதரவுடன் அதிகாரத்தில் இருக்கும் எதேச்சதிகார சக்திகளின் நிர்வாகத்தால் பேரழிவுமிக்க கொள்கைகள் அமலாக்கப்படுவதை தடுத்துநிறுத்தவில்லை என்றால் ஒட்டுமொத்த ஜனநாயக கட்டமைப்பும் தகரும் அபாயம் உள்ளது என்றும் கூறினர்.

கொரோனா தொற்று பரவல் காலத்தை தனக்கு

சாதகமாக பயன்படுத்திக் கொண்ட ஒன்றிய அரசு, தொழிலாளர் விரோதச் சட்டங்களையும் வேளாண் விரோதச் சட்டங்களையும் தானடித்த மூப்பாக நிறைவேற்றியது; லாபம் கொழிக்கும் பொதுத்துறை நிறுவனங்களை முற்றாக தனியாருக்கு விற்றுத் தீர்ப்பது அல்லது அடகு வைப்பது என்ற நிலைக்கு கொண்டு சென்றது; மக்களின் அன்றாட வாழ்வில் எத்தகைய மோசமான விளைவுகள் ஏற்படும் என்பதையெல்லாம் கணக்கில் கொள்ளாமல் விலைவாசி உயர்வு விண்ணில் பறக்கும் அளவுக்கு நிலைமைகளை உருவாக்கியது; சமூகத்தின் பிற்படுத்தப்பட்ட, அடித்தட்டில் உள்ள மக்களுக்கும் ஒட்டுமொத்தத்தில் இளைய தலைமுறையினருக்கும் வேலைவாய்ப்புகளை எந்த விதத்திலும் உருவாக்காமல் துயரத்தின் பிடியில் தள்ளியிருப்பது என்ற மோடி அரசின் நாசகர நடவடிக்கைகளை, மாநாட்டில் உரையாற்றிய தலைவர்கள் கடுமையாக சாடினர்.

பாஜக ஆளும் பல மாநிலங்களில் விரைவில் தேர்தல் வர உள்ள நிலையில், ஒன்றிய பாஜக அரசு தனது ‘‘சாதனைகளை’’ பட்டியலிட தீவிர முயற்சி மேற்கொண்டுள்ளது; ஆனால் உண்மையில் உலகப் பட்டினிக் குறியீட்டில் ஏற்கெனவே 101வது இடத்தில் இருந்த இந்தியா தற்போது 106வது இடத்திற்கு வீழ்ச்சி அடைந்துள்ளது என்பதை சுட்டிக்காட்டிய தலைவர்கள், தேர்தலில் வெற்றிபெறுவதற்காக எத்தகைய பயங்கர நடவடிக்கைகளையும் வெறுப்புப் பிரச்சாரத்தையும் கட்டவிழ்த்துவிடவும் பாஜக ஆட்சியாளர்கள் தயங்கமாட்டார்கள் என்றும் சுட்டிக்காட்டினர்.

இந்திய நாட்டின் தொழிலாளர்கள் - விவசாயிகள் சார்பில் மோடி அரசுக்கு பல்வேறு கோரிக்கைகளை இந்த மாநாடு முன் வைத்தது. தொழிலாளர் விரோதச் சட்டங்களை முற்றாக ரத்து செய்ய வேண்டும்; வேளாண் சட்டங்கள் மற்றும் மின்சார திருத்தச் சட்டத்தை ரத்து செய்ய வேண்டும்; தேசிய பணமாக்கல் திட்டத்தை முற்றாக ரத்து செய்ய வேண்டும்; எந்த வடிவத்திலும் பொதுத்துறை தனியார்மயம் கூடாது; ஏழ்மை நிலையில் உள்ள அனைத்து குடும்பங்களுக்கும் மாதம் ரூ.7500 நேரடி ரொக்க உதவி மற்றும் உணவு தானியங்கள் அளித்திட வேண்டும்; நகர்ப்புறங்களுக்கும் வேலை உறுதித் திட்டத்தை விரிவுபடுத்த வேண்டும்; ஒட்டுமொத்தத்தில் வேலை உறுதித் திட்டத்திற்கு நிதி

> மோடி அரசின் மக்கள்விரோத, தொழிலாளர் விரோத, விவசாய விரோத, தேசவிரோத கொள்கைகளை எதிர்த்து நாடு தழுவிய பொது வேலைநிறுத்தப் போராட்டத்தை 2022 பட்ஜெட் கூட்டத்தொடரின் போது நடத்துவதற்கு தயாராவீர்

ஒதுக்கீட்டை அதிகரிக்க வேண்டும்; அனைத்து முறைசாரா தொழிலாளர்களின் ஒருங்கிணைந்த சமூகப் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும்; அங்கன்வாடி, ஆஷா, சத்துணவு மற்றும் இதர திட்டங்களின் தொழிலாளர்களுக்கு கட்டாய குறைந்தபட்ச ஊதியம் மற்றும் சமூக பாதுகாப்பு உறுதி செய்ய வேண்டும்; பெருந்தொற்று பரவல் நீடிக்கும் நிலையில் அனைத்து முன்களப் பணியாளர்களுக்கும் முறையான பாதுகாப்பு மற்றும் இன்சூரன்ஸ் வசதிகள் வேண்டும்;

விவசாயம், கல்வி, சுகாதாரம் மற்றும் இதர முதன்மையான பொது துறைகளில் பொது முதலீட்டை அதிகப்படுத்த வேண்டும் - இதை பெரும் பணக்காரர்கள் மீது செல்வ வரி விதிப்பதன் மூலம் மேற்கொள்ள வேண்டும்; பெட்ரோலியப் பொருட்கள் மீதான மத்திய சுங்க வரியை குறைக்க வேண்டும்; விலைவாசி உயர்வை கட்டுப்படுத்த உறுதியான நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும்; ஒப்பந்தத் தொழிலாளர்களை நிரந்தரப்படுத்துவது, சமவேலைக்கு சம ஊதியம் வழங்குவது, புதிய பென்சன் திட்டத்தை ரத்து செய்வது, பழைய பென்சன் திட்டத்தையே மீண்டும் நடைமுறைக்கு கொண்டுவருவது - ஆகிய கோரிக்கைகளை இந்த மாநாடு மீண்டும் ஒன்றிய அரசுக்கு முன் வைத்துள்ளது. இந்த கோரிக்கைகளை வலியுறுத்தி, ‘‘மக்களைக் காப்போம், தேசத்தைக் காப்போம்’’ என்ற முழக்கத்துடன் நாடு தழுவிய இரண்டு நாள் பொது வேலை நிறுத்தத்தை எதிர்வரும் பட்ஜெட் கூட்டத்தொடரின்போது நடத்துவதற்கு நாட்டின் அனைத்து பகுதி தொழிலாளர்களும், உழைப்பாளி மக்களும் தயாராகிவிட வேண்டும்; இதை முன் வைத்து அனைத்து மாநிலங்கள் - மாவட்டங்களில் தொழிற்சாலை வாயில்களில் நகரக் கடைவீதிகளில், கிராமப்புறங்களில் தீவிரப் பிரச்சார இயக்கத்தை கொண்டுசெல்ல வேண்டும் என மாநாடு அறைகூவல் விடுத்தது.




# கார்ப்பரேட்டுகளை வென்ற விவசாயிகளின் போராட்டம் பணிந்தது ஒன்றிய அரசு!

- எஸ்.இராஜேந்திரன்

விவசாயிகளின் வாழ்வாதாரத்தை அழிக்கும் வகையிலும் கார்ப்பரேட் கம்பெனிகள் ஆதாயம் பெறும் வகையிலும் மோடி அரசு நாடாளுமன்றத்தில் எதிர்கட்சிகளின் எதிர்ப்பை பொருட்படுத்தாமல் மூன்று வேளாண் சட்டங்களை நிறைவேற்றியது.

இந்த அறிவிப்புக்கு பின்பு கடந்த 2020-ம் ஆண்டு நவம்பர் 26-ம் நாள் துவங்கிய போராட்டம் ஓராண்டை நெருங்கிய நிலையில் தற்போது மோடி அரசு இந்த மூன்று வேளாண் சட்டங்களை திரும்பப்பெற போவதாக அறிவித்தது. அதற்காக நவம்பர் 24-ந்தேதி கூடிய மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. தற்போது நவம்பர் 29-ல் பாராளுமன்றத்தில் எந்தவித விவாதமின்றி இந்த சட்டங்கள் வாபஸ் பெற்றுள்ளது.

ஓராண்டு காலமாக டில்லி எல்லைகளில் பல்வேறு மாநில விவசாயிகள் முற்றுகையிட்டு தொடர் போராட்டத்தை இன்று வரை நடத்தி வருகின்றனர். இதுவரை 750-க்கும் மேற்பட்ட விவசாயிகள் இந்த போராட்டத்தில் தங்களது இன்னுயிரை நீத்துள்ளனர். ஆயிரத்திற்கும் மேற்பட்ட விவசாயிகள் போலீசாரின் தாக்குதலுக்குள்ளாகி உடல்ரீதியாக பாதிக்கப்பட்டுள்ளனர். லக்கிம்பூர் என்ற இடத்தில் நடைபெற்ற பேரணியில் விவசாயிகள் திரண்டதைக்காண சகிக்க முடியாமல் ஒன்றிய அரசின் இணை அமைச்சர் அஜய்மிஸ்ராவின் மகன் ஆசிஷ்மிஷ்ரா விவசாயிகள் மீது வாகனத்தை மோதச்செய்து ஆறு விவசாயிகளை கொன்றார். இந்த நிகழ்ச்சியில் அஜய் மிஸ்ராவிற்கும் பங்குண்டு. லக்கிம்பூர் கேரியில் நமக்கெல்லாம் உணவு வழங்குபவர்களான விவசாயிகளுக்கு இழைக்கப்பட்ட கொடூரம் ஜீரணிக்க இயலாதது. மற்றும் மன்னிக்க முடியாததாகும். கொடுங்கோல் ஆட்சிக்கு இதுவும் ஒரு சான்றாய் மாறிவிட்டது.

ஓராண்டு நடைபெற்ற இந்த போராட்டம் அநேகமாக உலகிலேயே நீண்ட நாள் நடந்த போராட்டம் இதுவாகத்தான் இருக்கும். விவசாயிகளின் நியாயமான கோரிக்கையை ஏற்காமல், வேளாண் சட்டங்களை ரத்து செய்யாமல் பிடிவாதம் பிடித்து வந்த நிலையில் பல்வேறு மாநிலங்களில் நடைபெற்ற நாடாளுமன்ற,சட்டமன்ற இடைத்தேர்தலில் பி.ஜே.பி. படுதோல்வியை சந்தித்தது. அடுத்து வரப்போகும்

ஆட்சியில் இருக்கும் உ.பி. மாநிலம் உட்பட 5 மாநிலங்களுக்கான சட்டமன்ற தேர்தல் நடைபெற உள்ள நிலையிலும், விவசாயிகளின் போரோட்டம் பெரும் வீச்சாக கொழுந்துவிட்டு எரிந்த நிலையில் இந்த சட்டமன்ற தேர்தலில் பி.ஜே.பிக்கு எதிராக பிரச்சாரம் செய்வோம் என்று விவசாயிகள் அறிவித்த நிலையில் வேறு வழியின்றி இந்த மூன்று வேளாண் சட்டங்களையும் திரும்ப பெற்றுக் கொள்வதோடு நாட்டு மக்களிடம் மன்னிப்பு கோரும் நிலைக்கு மோடி இறங்கி வர வேண்டிய நிலை ஏற்பட்டது.

இதற்கு காரணம் ஓராண்டு காலமாக விவசாயிகள் உறுதியாக போராடியதன் விளைவு, அவர்களுக்கு ஆதரவாக தொழிலாளிகளும், ஜனநாயக இயக்கங்களும் ஆதரவு கரம் நீட்டி போராடியது.

ஆனாலும், மோடி அரசு வேளாண் சட்டங்களை வாபஸ் பெறப்போவதாக அறிவித்தப் பின்பும், விவசாயிகள், பாராளுமன்றத்தில் திரும்ப பெறுகின்ற சட்டம் இயற்றுகின்ற வரையிலும், மின்சார சட்டத்திருத்த மசோதா 2021 வாபஸ் பெறுகின்ற வரையிலும், விவசாயிகள் போராட்டம் தொடரும் என அறிவித்துள்ள அணுகுமுறை சரியானதாகும்.

அனைத்து தொழில்களுக்கும் தாய் தொழிலான மின்சாரத்துறையை பாதுகாக்க வேண்டுமென விவசாயிகள் கருதுவது தங்களுக்கு இலவச மின்சாரம் கிடைக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் அல்ல. மாறாக பொதுத்துறையாக பாதுகாக்க வேண்டும் என்ற உயரிய நோக்கத்தோடு தான்.

2016 நவம்பர் 8-ல் ரூ. 500, ரூ.1000, உயரிய நோட்டுகள் செல்லாது என அறிவித்த மோடி அரசு தேசத்தின் அமைதியையும், தொழிலையும் மக்களின் வாழ்வாதாரத்தையும் பறித்தது. அதற்கடுத்து 2020 நவம்பரில் நாசகர பொருளாதார கொள்கையையும், தொழிலாளர் விரோத சட்டங்களையும் மூன்று வேளாண் சட்டங்களையும் இயற்றி தொழிலாளர்கள் விவசாயிகள் ஆகியோரின் அடிப்படை வாழ்வையே சூறையாடினார்.

தொய்வில்லா இந்த போராட்டம் வெயில்,

**ஓராண்டு காலமாக விவசாயிகள்
உறுதியாக போராடியதன் விளைவு,
அவர்களுக்கு ஆதரவாக
தொழிலாளிகளும், ஜனநாயக இயக்கங்களும்
அதரவு கரம் நீட்டி போராடியது.**

மழை, வெள்ளம்,கொரானா என எதுவும் தடையும் இல்லாமல் உழைக்கும் வர்க்கத்திற்கு நம்பிக்கையூட்டிய போராட்டம். இவர்களது உறுதி பேச்சுவார்த்தையின் போது ஒன்றிய அரசு கொடுத்த உணவையும், தண்ணீரையும் ஏற்றுக்கொள்ள மறுத்து விட்டது. எந்த சமரசத்தையும் நாங்கள் ஏற்றுக்கொள்ள மாட்டோம். மூன்று வேளாண் சட்டங்களையும், முழுமையாக திரும்பப்பெற வேண்டுமென்ற உன்னத கோரிக்கையும், லட்சியமே என தேசத்திற்கு எடுத்துரைத்தது.

500 விவசாய சங்கங்களை **"சம்யுக்தா கிஷான் மோர்சா"** (SKM) என்ற ஒரு குடையின் கீழ் கொண்டு வந்து போராடியது கூட்டுச்செயல்பாடு, ஒருமித்த கருத்து என்ற தாரக மந்திரத்தை முன்னெடுத்துச் சென்றுள்ளது.

ஒன்றுபட்ட போராட்டத்திற்கு முன்னால் எதுவும் எடுபடாது என்று ஒன்றிய அரசுக்கும், கார்ப்பரேட்டுக்களுக்கு உணர்த்தியுள்ளனர்.

போராட்டத்தை கற்றுத்தந்து உலகத்திற்கே வழி காட்டியுள்ள விவசாய போராளிகளுக்கு செவ்வணக்கம்.

மக்கள் சக்திக்கு முன்பு சர்வஅதிகாரம் படைத்த அரசுகளே ஆனாலும் அடிபணிந்து ஆக வேண்டுமென இந்த போராட்டம் ஆளும் வர்க்கத்திற்கு உணர்த்தியுள்ளது.

**வரலாறு படைத்த போராட்டம்!
வர்க்கத்தை இணைத்த போராட்டம்!!**



# வீரகாவியம் வெண்மணி ! தியாகம் போற்றுவோம் ! சமுதாயத்தை மாற்றுவோம் !

– அ.சவுந்தரராசன்



இப்போதைய நாகை மாவட்டத்தில் கீழ்வெண்மணி என்கிற உள்ளடங்கிய ஒரு குக்கிராமத்தின் தலித்குடியிருப்பில் 44 மனிதர்களை உயிரோடு தீயிற்கு இரையாக்கி எரித்துக் கொன்ற நாள் 1968 டிசம்பர் 25.

53 ஆண்டுகள் கடந்துவிட்டது. அந்த கொடுந் தணலின் வெப்பம் இப்போதும் எம்மை உலுக்கிக்கொண்டே இருக்கிறது. அன்றாடம் சூரியத்தீயில் வெந்து உடல் வருத்தி உழைத்துப்பிழைத்து வந்த அந்த விவசாயக்கூலி மக்கள் கொடிய பண்ணையார்கள் வைத்த நெருப்பில் எரிந்து கருகி சாம்பலாகிப் போனார்கள். இன்று தொழிற்சாலைகளிலா பணியாற்றிக் கொண்டிருக்கின்ற தொழிலாளர்கள் யாரும் அப்போது பிறந்தே இருக்க மாட்டார்கள். இன்று 70 வயதைக் கடந்திருக்கிற அன்றைய தொழிலாளர்களும், தோழர்களும் தான் அந்த சம்பவத்தின் கோரத்தை நேரில் அறிந்தவர்கள்.

தமிழக உழைக்கும் மக்களின் வீரஞ்செறிந்த போராட்ட வரலாற்றில் இவ்வளவு பெரும் தியாகம் வேறு எந்த தருணத்திலும் நடைபெறவில்லை. விவசாயிகளோ, தொழிலாளர்களோ எந்த உழைப்பாளியானாலும் அவர்கள் பெற்றுள்ள ஒவ்வொரு உரிமைக்குப் பின்னாலும் போராட்டமும், பெரும் தியாகம் இருக்கிறது என்பதை பறை சாற்றிக் கொண்டிருக்கும் சம்பவம் அது. பின்னணி என்ன?

இன்று தஞ்சை, நாகை, திருவாரூர்,மயிலாடுதுறை என்ற நான்கு மாவட்டங்களாக இருக்கிற காவிரி பாய்கிற ஒன்றுபட்ட தஞ்சை தரணியில் ஆயிரம் ஆயிரம் ஏக்கர் நிலங்கள் ஒருவருக்கே சொந்தம் என்று பண்ணையார் நீலக்குவியல் முறை அங்கே இருந்தது. கோயில்கள் மடங்களின் பெயரிலும் ஆயிரம்,பல்லாயிரம் ஏக்கர் விளை நிலங்கள் இருந்தன? இந்த நிலங்களில் விவசாயக் கூலி வேலை செய்கிற பல்லாயிரக்கணக்கான பட்டியலின மக்கள் ஏதுமற்றவர்களாய், பண்ணையாளர்களின் தயவில் அடிமைகளாய் இருந்தார்கள். இவர்கள் பண்ணையார் காட்டுகிற இடத்தில் குடிசை போட்டு ஒதுக்குப்புறமாய் வைக்கப்பட்டார்கள்.

கூலி அடிமைகள் என்கிற பொருளாதார ஒடுக்குமுறைக்கும், தாழ்த்தப்பட்டவர்கள் என்கிற முறையில் தீண்டாமை போன்ற பெரும் சமூக ஒடுக்கு முறைக்கும் அவர்கள் ஆளானார்கள். சமூக

ஒடுக்குமுறைக்கு எதிராகவும், பொருளாதார சுரண்டலுக்கு எதிராகவும் கம்யூனிஸ்ட் கட்சி இவர்களை விவசாய சங்கத்தின்கீழ் அணி திரட்டியது. கூலிப் போராட்டம், மயானத்திற்கான போராட்டம், தோளில் துண்டு போடுவதற்கான போராட்டம், எந்த தெருவிலும் நடப்பதற்கான போராட்டம்,சாணியைக் கரைத்து வாயில் ஊற்றுவது,சவுக்கால் அடிப்பது போன்ற தண்டனைகளை எதிர்த்து போராட்டம், தலித்பெண்களின் சுதந்திரத்திற்கான போராட்டம், பண்ணை அடிமை முறையை ஒழிப்பதற்கான போராட்டம் என்று பல பல போராட்டங்கள் விவசாய சங்கம் முன்னெடுத்தது.

மிகக்கொடூரமான அடக்குமுறைகளாலும், ரவுடித்தனத்தாலும், பொய் வழக்குகளாலும் இந்த முயற்சியை, எழுச்சியை ஒடுக்குவதற்கு பண்ணை யாரகள் முயன்றனர். அரசு நிர்வாகம் பணியாளர்கள் பக்கம் நின்றது. போராட்டங்களும், அடக்கு முறைகளும், தியாகங்களும் தொடர் நிகழ்வுகளாக இருந்தன. வர்க்கப்போர் அல்லவா?

1960க்கு பிறகு பண்ணையார்கள் தங்களின் நெல் உற்பத்தியாளர் சங்கத்தின் மூலம் விவசாய சங்கத்தை அடியோடு ஒழிப்பது என்பது தீவிர முயற்சியில் இறங்கினர். ஒரு கட்டத்தில் விவசாய சங்கமோ, கம்யூனிஸ்டுகளோ எந்த கிராமத்திலும் தங்கள் கொடியை பறக்க விடக்கூடாது என்றும், அனைத்து கொடிக்கம்பங்களையும் அகற்ற வேண்டும் என்றும் கூறினார்கள். விவசாயிகள் சங்கத்திலிருந்து விலகி நெல் உற்பத்தியாளர் சங்கத்தில் சேர வேண்டுமென உத்தரவிட்டனர். விவசாயிகள் இந்த தான்தோன்றித்தனமான ஆணவ உத்தரவுகளை நிராகரித்தனர். பல ஊர்களில் அடியாட்களுக்கும் விவசாயிகளுக்கும் மோதல் நடந்தது. இதன் உச்ச கட்டம்தான் வெண்மணியில் 1968, டிசம்பர் 25 இரவு அடியாட்கள் படை தாக்குதல் தொடுத்தது. போலீசும் உடனிருந்தது. ஒரு சிறு குடிசையில் புகுந்து ஒருவர் மேல் ஒருவர் என அடைந்து கிடந்த 44 பேர்களை வெளியில் தாளிட்டு தீயிட்டுக் கொளுத்தினார்கள்.

சங்கமாக திரளக்கூடாது, உடமை வர்க்கத்தை கேள்வி கேட்கக்கூடாது, அடிமைகளாய் கொடுப்பதை பெற்று கிடைப்பதை உண்டு வாழ வேண்டும் என்பதுதான் பண்ணையார்களின் நோக்கம்.

சங்கம் கூடாது என்ற முதலாளிகளின் தாக்குதல் முயற்சியை இன்றும் ஒவ்வொரு தொழிற் சாலையிலும் காண்கிறோம். வெண்மணி போராட்டம் ஒருவகையில் சங்கம் அமைக்கும் உரிமையை நிலைநாட்ட வயல்வெளி உழைப்பாளிகள் நடத்திய போராட்டம். இந்தத் தியாகப்போர் பல உரிமைகளை விவசாயிகளுக்கு பெற்றுத்தந்தது. மனிதர்களாய் தலைநிமிர்ந்து, சமூக ஒடுக்குமுறையை பெருமள வில் ஒழித்திருப்பது அவர்களின் மகத்தான வெற்றி.

இந்த வெண்மணியின் தியாகம், அடக்குமுறைகளை தூளாக்கி உழைக்கும் வர்க்கமே வெற்றி பெறும் என்ற செய்தியை உரக்கக்கூறி கொண்டிருக்கிறது.

வெண்மணியில் சிஐடியு தமிழ்நாடு மாநிலக்குழு கம்பீரமான நினைவாயத்தை எழுப்பியுள்ளது. தமிழகத் தொழிலாளர்களின் உணர்வுமிக்க நிதியளிப்பும், ஒத்துழைப்பும் இதை சாத்தியமாக்கியிருக்கிறது. இந்த நினைவாலயம் தமிழக தொழிலாளி வர்க்கம் நிகழ்த்தியுள்ள செயற்கரிய செயல் என்றால் மிகையல்ல.

## வாழ்த்துகிறோம்




நெல்லை திட்டம் கல்லிடைகுறிச்சி கோட்டத்தின் முன்னாள் செயலாளர் தோழர் எம். சந்திரசேகர் அவர்களின் மகள் நிதியாஸ்ரீ - கே. வெங்கடகிரி இருவரின் திருமணம் 09.09.2021 அன்று நடைபெற்ற போது மின்கதிர் வளர்ச்சி நிதியாக ரூ. 1000/-ம். நெல்லை திட்டத்திற்கு ரூ. 4000/- அளித்தார். வாழ்த்துக்கள்

# தமிழ்நாடு பவர் இன்ஜினியர்ஸ் ஆர்கனைசேஷன்

# 6வது மாநில மாநாடு





## 11,12,2021 கோவை

### தோழர் S. P. R நினைவரங்கம்

தமிழக மின்வாரியத்தில் பணிபுரியும் பொறியாளர்களுக்கு பட்டம் பெற்றவர்களுக்கென ஒரு சங்கமும், பட்டயம் பெற்றவர்களுக்கென ஒரு சங்கமும் என செயல்பட்டு வந்தது. அனைத்து தரப்பு பொறியாளர்களையும் ஒன்றிணைத்து அவர்களுக்கான கோரிக்கையை உருவாக்கி அவர்களை வைத்து போராடி உரிமையைப் பெற்றுத் தர வேண்டுமென மத்திய அமைப்பின் மகத்தான தலைவர்கள் தோழர் து. ஜானகிராமன் மற்றும் தோழர் எஸ். பஞ்சரத்னம் ஆகியோரின் முயற்சியால் உருவாக்கப்பட்டது தான் தமிழ்நாடு பவர் இன்ஜினியர்ஸ் ஆர்கனைசேசன்.

இந்த அமைப்பு உருவான காலத்திலிருந்தே பொறியாளர்களுக்கு பதவி உயர்வு உள்ளிட்ட பிரச்சனைகளில் அதே போல நேரடி நியமன தேர்வில் மதிப்பெண்களை வழங்க வேண்டும் என்பன போன்ற கோரிக்கைகளோடு நீதிமன்றத்தின் வாசலைத் தட்டி தீர்ப்பு பெற்றது இன்றைக்கும் நேரடி பணி நியமனத்திற்கு வழி வகுத்தது இந்த அமைப்பு பெற்ற தீர்ப்பு.

மின்வாரியத்தில் மின்சார சட்டதிருத்த மசோதாவிற்கு எதிராகவும், தொழிலாளி வர்க்கத்தின் உரிமைகள் பறிக்கப்படும் பொழுதும், வேலை நிறுத்தம் உள்ளிட்ட அனைத்து நடவடிக்கைகளிலும் பங்கு பெற்ற பெருமை இந்த அமைப்புக்கு உண்டு, இந்த அமைப்பின் 6வது மாநில மாநாடு 2021 டிசம்பர் 11 ல் கோவையில் நடைபெற உள்ளது.

**உரிமைகளுக்கான கோரிக்கைகள் எழட்டும்**
**பொறியாளர்களை அணி திரட்டுவோம்**
**மாநில மாநாடு அனைத்து வகையிலும்**
**வெற்றிபெற மத்திய அமைப்பின் வாழ்த்துக்கள்**

**ஹர்ஷா மஹால்**
பீளமேடு, ஹோப் காலேஜ் அருகில் மசக்காளிபாளையம். கோவை



# ஒழுங்கற்ற ஒழுங்கு

வடகிழக்கு பருவமழை தீவிரமடைந்து தமிழகம் முழுவதும் பரவலாக மழை பொழிவு ஏற்பட்டுள்ளது. 2015-ம் ஆண்டில் சென்னை, கடலூர், திருவள்ளூர் மாவட்டங்களில் ஏற்பட்ட அதிக மழை பொழிவு காரணமாக சென்னை வெள்ளக்காடானது. மக்கள் கடும் துன்பத்திற்கு ஆளானார்கள். செம்பரம்பாக்கம், ஏரியை படிப்படியாக திறந்து விடாமல் முழுவதுமாக திறந்து விட்டு சென்னையை மிதவை மாநகரகமாக மாற்றியது அந்த துயர சம்பவம். அதில் கற்றுக் கொண்ட பாடங்கள் ஏராளம்.ஏராளம். கற்றுக்கொண்ட பாடங்களிலிருந்து மக்களுக்கு நன்மை கிடைத்ததா என்று பார்த்தால் இல்லை என்று தான் சொல்ல வேண்டும்.

தற்பொழுதும் அதே போல் மழை பெய்து வருகிறது. சென்னை, செங்கற்பட்டு, திருவள்ளூர்,விழுப்புரம்,திருவண்ணாமலை, கடலூர் மாவட்டங்களிலுள்ள பொதுத்துறைக்குச் சொந்தமான பெரும்பான்மையான ஏரிகள், முழுகொள்ளளவை எட்டியுள்ளது. வடகிழக்கு பருவமழை துவங்கி, ஏழு நாட்களே ஆன நிலையில் தமிழகத்தில் மழைபொழிவு என்பது சராசரியைவிட அதிகமாக உள்ளதாக வானிலை ஆய்வு மையமும், மாநில அரசின் செய்தி குறிப்புகளும் தெரிவிக்கின்றன. தமிழகத்தினுடைய பருவமழையும், அதை தொடர்ந்து மக்கள் படும் அல்லலும் நீண்ட நெடிய வரலாற்றையும் கசப்பான உணர்வுகள் நீங்காத வடுவாய் மக்கள் மனதில் ஆழமாக நிலைத்து விட்டது. மக்களுடைய பிரச்சனைகளை நிரந்தரமாக தீர்ப்பதற்கு பதிலாக மாநில அரசு ஒவ்வொரு முறையும் தற்காலிக தீர்வையே முன்வைக்கிறது.

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில அரசு பேரிடர் காலங்களில் மக்களை காப்பதும், மக்களை துன்பதுயரங்கள் அனுகா வண்ணம் பாதுகாப்பதும் மிக முக்கியமான அரசியல் கடமையாகும். வாக்களித்த மக்களுக்கு வளமான வாழ்க்கைத்தரத்தை அளிக்க வேண்டிய அரசுகள் அதற்கான அடிப்படை அம்சங்களை ஆராய்ந்து தீர்வு காண்பதற்கு பதிலாக, அரசியல் செய்வதாகவே மக்கள் கருதுகின்றனர். மக்களுடைய அறியாமையை பயன்படுத்தி கொண்டு மக்களுடைய பொருளாதார பலவீனத்தை கணக்கில்கொண்டு அவர்களுக்கு இலவசங்கள் அளித்து அவர்கள் தங்களது உரிமைகளை கோராத வண்ணம் நீண்ட நெடிய நாட்களாக அரசுகள் பாதுகாத்து வருகிறது. இதன் காரணமாகவே மக்கள் அமைதியாகவும், வறுமையின் பிடியில் சிக்கியும் உள்ளனர். இதற்கு காரணம் தங்களது முன் ஜென்மபாவம் என்று கருதுகின்றனர். மக்களின் உரிமைகளை மக்களுக்கு எடுத்துச்சொல்லி மக்களை போராட்ட களத்திற்கு கொண்டு வருவது தான் இதற்கு ஒரே வழி.

சென்னையில் தாழ்வான பகுதிகளாக வியாசர்பாடி, புளியந்தோப்பு, கோட்டூர்புரம், இராஜா அண்ணாமலைபுரம், மேற்கு மாம்பலத்தின் சில பகுதிகள், கோடம்பாக்கத்தின் சில பகுதிகள், வள்ளுவர் கோட்டத்தின் சில பகுதிகள், என்று சென்னையில் உள்ள பெரும்பாலான பகுதிகள் மழைநீர் தேங்குவதும், மழைநீரில் கழிவு நீர் கலப்பதும், மழைநீர் வீட்டிற்குள் புகுவது என்பது இன்றல்ல நேற்றல்ல கடந்த அறுபது ஆண்டுகளாக தொடர்ந்து நடப்பது தான். அறுபது ஆண்டுகளாக ஆட்சி செய்த ஆட்சியாளர்கள் தமிழகத்தின் தலைநகரான சிங்கார சென்னையை, சென்னை மக்களை மழை வெள்ளத்திலிருந்து பாதுகாப்பதற்கான எந்த நடவடிக்கையும் எடுக்காதது ஆட்சியாளர்களின் தொலைநோக்கு பார்வையற்ற, நிர்வாக திறமையின்மையை

காட்டுவதாகவே அமைந்துள்ளது. இது ஒவ்வொரு காலத்திலும் ஊடகங்களால் விமர்சிக்கப் பட்டிருந்தாலும், சமூக ஆர்வலர்களால், அரசு ஊடகத்தால் எழுதப்பட்டு வந்தாலும் ஆட்சியாளர்கள் அதைப்பற்றி கவலை கொள்ளாதது மிகுந்த வேதனை அளிக்க கூடிய விஷயமாக உள்ளது.

நவீன தொழில்நுட்பங்கள் வேகமாக வளர்ந்து வரும் இன்றைய நாட்களில், மழைநீரை சேமிப்பது, வெள்ளநீர் வீடுகளுக்குள் புகாமல் பாதுகாப்பது.சுகாதார வசதிகளை மேம்படுத்துவது, இயற்கை சீற்றங்களிலிருந்து மக்களை பாதுகாப்பது போன்றவற்றில் அதிக முக்கியத்துவம் அளிக்காமல் மக்களின் அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்வதற்கு முயற்சி செய்யாமல் இருப்பது, கடந்தகால ஆட்சியாளர்களின் வரலாற்று பதிவாக உள்ளது. வரலாற்றை மாற்றி எழுத வேண்டும் என்று நினைப்பவர்கள் குறிப்பாக ஆட்சியாளர்கள் நான்கு முக்கிய விஷயங்களை முன்வைத்து செய்பவை யாக உள்ளது. மக்களின் அடிப்படை தேவையாக உள்ள **கல்வி, வேலை, வீடு, சுகாதாரம்** இந்த நான்கு விஷயங்களை முன்வைத்து அவர்கள் ஏற்றம் பெற வேண்டும் என்பதற்காக திட்டங்களை திட்டி, நடைமுறைப்படுத்துவதன் மூலமாக சமத்துவ சமூகத்தை உருவாக்கி நாட்டில் பொருளாதார வலிமையை ஏற்படுத்த முடியும். பிற வளர்ந்த நாடுகளோடு போட்டி போடும் நிலையை உருவாக்கவும் முடியும். நமக்கு பின் சுதந்திரம் அடைந்த சிங்கப்பூர் நாடு நம்மைவிட வலிமையான பொருளாதாரம் கொண்ட நாடாக மாறியதற்கு காரணம் லீ கவாங்யூவி என்ற பிரதமர். சிங்கபூர் என்ற குட்டித்தீவை இயற்கை வளங்களற்ற குட்டித்தீவை 25 ஆண்டுகள் கட்டுமானம் செய்தார். இன்று இந்திய பண மதிப்பில் ஒரு சிங்கப்பூர் டாலருக்கு இந்திய பணம் 55 ரூபாய் கொடுக்க வேண்டியுள்ளது. அதாவது இந்தியாவை விட 55 மடங்கு பொருளாதார வலிமை படைத்த நாடாக அவர் மாற்றி காட்டினார். அதற்கு அவர் மக்களுக்கு கொடுத்த வாக்குறுதி என்பது கல்வி, வேலை, வீடு மற்றும் சுகாதாரத்தில் தன்னிறைவு அடைவதாகும். அதனால் சிங்கப்பூர் இன்று உயர்ந்து நிற்கின்றது.

இயற்கை சீற்றங்களை எவ்வாறு கையாள் வது என்பது தொடர்பாக ஜப்பான், அமெரிக்கா போன்ற நாடுகளின் நவீன தொழில் நுட்பத்தை கற்றுக்கொள்வது முக்கியமானதாகும். பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பு அமெரிக்காவின் புளோரிடா மாநிலத்தில் கடும் மழை பெய்துவெள்ளப்பெருக்கு ஏற்பட்டு வீடுகளுக்கு மழை நீர் புகுந்தது. அதில் மக்கள் அதிகமாக பாதிக்கப்பட்டதோடு, அரசுக்கு சேதாரங்கள் அதிகமாக ஏற்பட்டது. இந்த அனுபத்தை கணக்கில் கொண்டு அடுத்த ஆண்டு இதே போல சேதாரம் ஏற்படாமல் இருப்பதற்கான ஆற்று நீரை திசை திருப்பி மூன்று வகையான கிளை ஆறுகளை செயற்கையாக உருவாக்கி புதிய நீர் நிலைகளை உருவாக்கினார்கள். இதனால் வெள்ளநீர் நகருக்குள் வராமல் பாதுகாக்கப்பட்டது. இதை மக்களின் மீது கொண்ட அக்கரையால் மக்களை பாதுகாக்க வேண்டும் என்ற கடமை உணர்வால் குறுகிய காலத்தில் செய்து முடித்து மக்களின் பாராட்டைப் பெற்றார்கள். இது போல் அரசு இருக்க வேண்டும் என்று நாம் கருதுகிறோம்.

இயற்கை நமக்கு அளப்பரிய வளங்களை கொடுத்திருக்கிறது. நீர்வளம், நிலவளம், காற்றுவளம், கடல் வளம் போன்றவற்றை இயற்கை அளித்துள்ளது. ஒழுங்கற்றதாக காணப்படும் இந்த இயற்கை வளங்கள் கூர்ந்து நோக்கினால் இது ஒழுங்காக கட்டமைக்கப்பட்டது என்று தெரியவரும். இந்த ஒழுங்கை நாம் தீண்டும் பொழுது இயற்கை நம்மீது சீற்றம் கொள்கிறது. அதாவது காடுகளை வெட்டினால் மழை பொழிவு குறையும், காடுகளில் ஒழுங்கு தன்மை மாறும். ஏரிகளை ஆக்கிரமித்தால் மழை நீர் வீட்டின் உள்ளே வரும். நீர்வழிப்போக்கில் வீடுகள் அமைந்தால் வெள்ளத்தால் அடித்துச்செல்லப்படும் என்ற இயற்கை நீதியை உணர்ந்து அரசுகள் செயல்பட வேண்டும், மக்களை காத்திட வேண்டும். நீர்வளத்தையும், நிலவளத்தையும் யார் சரியாக கையாள்கிறார்களோ அவர்கள் மிகவும் சிறப்புக்குரியவர்கள் என்று முன்னோர்கள் குறிப் பிட்டுள்ளனர். அதனால் தான் கரிகால் சோழன் கல்லணையை கட்டினான். சோழர்களும், பல்லவர் களும் ஏரிகளை அமைத்து நீர்பாசனத்திற்கு மிக பெரிய அளவிற்கு வித்திட்டனர்.

எனவே இயற்கையோடு எப்படி போராடுவது என்று யோசிப்பதை விட இயற்கை நமக்கு அளித்த கொடைகளை பயன்படுத்தி, புதிய தொழில்நுட்பங்களையும் புகுத்தி இயற்கை பேரிடர்களிலிருந்து மக்களை பாதுகாப்பவர்களே சிறந்த ஆட்சியாளர்கள்.

அவர்களை காண்பது எப்போது...?

மக்கள் மழை வெள்ளத்திலிருந்து மீள்வது எப்போது?

- **தி.ஜெயசங்கர்**




# ஹைதராபாத்தில் நடைபெற்ற சிஐடியூ அகில இந்திய பொதுக்குழு முடிவுகள்

சிஐடியூ அகில இந்திய பொதுக்குழு 2021 நவம்பர் 16 முதல் 18 வரை ஹைதராபாத் நகரில் நடைபெற்றது. பொதுக்குழுவில் கடந்த சென்னை மாநாட்டிற்கு பின்பு நமது செயல்பாடுகள் குறித்து இடைக்கால ஸ்தாபன பரிசீலனை செய்யப்பட்டது. 285-க்கும் மேற்பட்ட பொதுக்குழு உறுப்பினர்கள் கலந்து கெண்டனர்.

இந்த பொதுக்குழுவில் தமிழகத்தின் சார்பில் வேலை அறிக்கையில் தோழர் எஸ். கண்ணன் உதவி பொதுச்செயலாளர்/சிஐடியூ அவர்களும், ஸ்தாபன பரிசீலனை அறிக்கையில் மாநில செயலாளர்கள் தோழர் எஸ்.இராஜேந்திரன் மற்றும் தோழர் ஹைடா ஆகியோர் கலந்து கொண்டனர். இப்பொதுக்குழுவில் கீழ்கண்ட இலக்குகளை நாம் அடைய திட்டமிட வேண்டுமென வலியுறுத்தப்பட்டது.

**இலக்குகள்**

1. 2021 நவம்பர் 26 இயக்கம் : நவம்பர் 15 முதல் 25 வரை பத்து நாட்களுக்கு மாநிலந்தழுவிய சுயேச்சையான பிரச்சாரம் நடத்திடவேண்டும். பிரச்சாரத்தில் தேசிய பணமாக்கல் திட்டம், புலம் பெயர் தொழிலாளர்கள் கோரிக்கைகள், குறைந்தபட்ச ஊதியம், சமூகபாதுகாப்பு, விலைவாசி உயர்வு ஆகிய கூட்டமைப்பின் கோரிக்கைகளுடன், மாநிலத்தில் நிலவும் பிரதான தொழிலாளர் கோரிக்கைகளயும் இணைத்து பிரச்சாரத்தை நடத்தவேண்டும்.

   சிஐடியு மாநிலக்குழு விரிவான பிரச்சாரத்திற்கு சிறப்பு முயற்சிகள் எடுக்கவேண்டும். பா.ஜ.க. அரசின் கொள்கைகளுக்குப் பின்னாலுள்ள அரசியலை அம்பலப்படுத்தும் விதத்தில் பிரச்சாரங்களை திட்டமிடவேண்டும். தேசிய பணமாக்கல் திட்டம் எவ்விதம் பல்வேறு துறைகளை பாதிக்கிறது என்பதையும் ஒவ்வொரு பிரச்னையின் தாக்கத்தைக் குறித்தும் பல்வேறு துண்டுப்பிரசுரங்கள் வாயிலாக மக்களிடம் எடுத்துச்செல்லவேண்டும்.
2. இரண்டு நாட்கள் வேலைநிறுத்தம் - தயாரிப்பு பணிகள் : பாராளுமன்ற பட்ஜெட் கூட்டத் தொடரின் போது இரண்டு நாட்கள் வேலை நிறுத்தம் நடத்திட வேண்டுமென அனைத்து தொழிற்சங்கங்களின் கூட்டு மேடை முடிவு செய்துள்ளது. டிசம்பர், ஜனவரி ஆகிய இரண்டு மாதங்கள் தயாரிப்பு பணிகளில் நமது கிளைமட்ட உறுப்பினர்கள் உள்ளிட்டு அனைவரையும் ஈடுபடுத்த வேண்டும்.
3. உறுப்பினர் சேர்ப்பு இயக்கம் : மாநிலக்குழுக்கள் 16வது மாநாட்டின் இலக்கை நிறைவேற்றும் வகையில் உறுப்பினர் சேர்ப்பு இயக்கத்தை திட்டமிடவேண்டும். மாநில, மாவட்ட, துறைவாரியாக வகுப்புகளை நடத்தி தகுந்த வகையில் திட்டமிடவேண்டும். டிசம்பர் மாதம்

முழுவதும் இதற்காக ஒதுக்க வேண்டும். சிஐடியுவுடன் இணைக்கப்பட்டுள்ள சங்கங்கள் ஒருவார காலத்தைஉறுப்பினர் சேர்க்கைக்காக முடிவுசெய்யவேண்டும்.

4. காசியாபாத் கட்டி நிதி : சிஐடியு முழு நேர ஊழியர்களின் குடியிருப்பு காசியாபாத்தில் கட்டப்பட்டு வருகிறது. அதற்காக மாநிலங்களுக்கு நிச்சயித்த கோட்டாவின் நிலுவைத்தொகையை 2022 ஜுன் மாதத்திற்குள் முடித்திடவேண்டும்.

5. உ.பெ. ஒ.மாநாடு :உழைக்கும் பெண்கள் ஒருங்கிணைப்புக்குழுவின் அகில இந்திய மாநாடு ஏப்ரல் 2022-ல் நடத்துவது என முடிவு எடுக்கப்பட்டது.இடம் பின்னர் அறிவிக்கப்படும்.

6. மத்திய வகுப்புகள்: அகில இந்திய நிர்வாகிகளுக்கான விரிவடைந்த மத்திய வகுப்புகள் பிப்ரவரி 2022ல் நடத்துவது என முடிவு செய்யப்பட்டது. இதில் அகில இந்திய நிர்வாகிகள், மாநில பொதுச்செயலாளர்கள், அகில இந்திய நிர்வாகக்குழுவில் இடம் பெறாத சம்மேளனங்களின் பிரதிநிதிகள் ஆகியோருக்கு இன்றைய அரசியல் நிலைமைகள், பொருளா தாரம், தொழிற்சங்கம் எதிர்நோக்கும் சவால்கள் போன்றவைகளில் ஒருங்கிணைந்த புரிதலை ஏற்படுத்தும் விதத்திலும், சிஐடியுவை பலப்படுத்த உறுப்பினர் எண்ணிக்கை, விரிவாக்கம், ஊழியர்கள், உணர்வு மட்ட மேம்பாடு ஆகியவைகளின் அவசியம் குறித்தும் வகுப்புகள் நடத்தப்படும்.

7. 17வது மாநாட்டிற்கு முன்பாக, இரண்டு அல்லது மூன்று அகில இந்திய சம்மேளனங்கள் குறித்து அகில இந்திய நிர்வாகிகள் கூட்டம் விவாதிக்கவேண்டும்.

8. பி.ஆர்.பவன்: 16வது மாநாட்டின் முடிவின்படி,தேசிய சம்மேளன தலைவர்கள், மாநில நிர்வாகிகள் ஆகியோருக்கு தொடர் வகுப்பு மார்ச் 2022 க்குள் நடத்துவது என முடிவு செய்யப்பட்டது. குறைந்தபட்சம் 200 நாட்கள் நடத்தவேண்டும் எனவும் முடிவு செய்யப்பட்டது. அதற்கான நிதியை உருவாக்கவும் முடிவு செய்யப்பட்டது. மாநிலக்குழுக்கள் பி.ஆர்.பவன் கோட்டாவை 2022 ஜுன் மாதத்திற்குள் முடித்திடவேண்டும்.

9. ஊழியர் மேம்பாடு:16 வது மாநாட்டின் முடிவின்படி, அரசியல் ரீதியாகவும்.சித்தாந்த ரீதியாகவும் 50 ஊழியர்களை கண்டெடுத்து அவர்களை மேம்படுத்த முடிவு செய்யப்பட்டது. இந்த முடிவினை வரும் மாநாட்டிற்குள்ளாக அமலாக்கும் விதத்தில் குறிப்பாக ,இந்தி பேசும் மாநிலங்களில் வகுப்புகள் நடத்தவேண்டும் என்று அனைத்து மாநிலங்களுக்கும் தெரிவிக்கப்பட்டது.

10. சிஐடியு பத்திரிக்கைகள் : நமது உறுப்பினர் எண்ணிக்கையை விட நமது பத்திரிக்கைகளின் எண்ணிக்கை மிக மிக குறைவு. நமது உறுப்பினர் எண்ணிக்கைக்கு இணையாக பத்திரிக்கைகள் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டும். மாநில மையங்கள், மாநிலக் குழுக்கள், சம்மேளனங்கள் ஒருங்கிணைந்து செயல்பட்டு சாத்தியமாக்கவேண்டும்.

சிஐடியு பத்திரிக்கைள் தங்களது சொந்த காலில் நிற்கவேண்டும். இதற்காக அனைத்து மாநில கமிட்டிகளும் மாதம் ஒரு முறை ஒருபக்க விளம்பரம் அளிக்கவேண்டும். சம்மேளனங்கள் அரைபக்க விளம்பரங்களை வருடத்தில் சாத்தியப்பட்டபோதெல்லாம் அளித்து உதவ வேண்டும்.

11. ஒருங்கிணைப்புக்குழுக்கள்: 2022 மார்ச் மாதத்திற்குள் கிராம/வட்டார/ பகுதி அளவில் ஒருங்கிணைப்புக்குழுவை அமைக்கவேண்டும்.

12. முன்னுரிமை துறைகள் : 16வது மாநாட்டின் முடிவின்படி, அனைத்து மாநிலக்குழுக்களும் போக்குவரத்து துறையில் கவனம் செலுத்த வேண்டும். விரிவாக்கத்திற்கு வாய்ப்புள்ள துறையாகும். அணிதிரட்டப்பட்ட அமைப்புகளில் (தனியார் மற்றும் பொது )சிஐடியுவை பலப்படுத்துதற்கு கூடுதல் கவனம் செலுத்த வேண்டும்.அதற்காக ஒரு மாநில நிர்வாகியை பொறுப்பாக்க வேண்டும். பொதுச்செயலாளர் அறிக்கையில் குறிப்பட்டது போல் இரயில்வே ஒப்பந்த தொழிலாளர், ஐடி, ஐடிஇஎஸ், இ-சேவை, உணவு விநியோக தொழிலாளர்கள், 100நாள் வேலை தொழிலாளர்கள், கிராமப்புறங்களில் விவசாயத்தில் ஈடுபடாத தொழிலாளர்கள் ஆகியோரை திரட்டிட முன்னுரிமை அளிக்கவேண்டும்.

13. 2022 ஜனவரி 19 : விவசாயிகளின் கோரிக்கை களை முன்வைத்து பொதுவேலைநிறுத்தம் நடைபெற்று 2022 ஜனவரி 19-ல் 40 ஆண்டுகள் நிறைவடைகின்றது. மேலும் விவசாயிகள் - தொழிலாளி ஒற்றுமையை மேலும் வலுப்படுத்தும் விதத்தில் அந்த தினத்தை தகுந்தவகையில் கடைப்பிடிக்கவேண்டும்.



## மின்வாரியமே! REDEPLOYMENT முறையை கைவிடுக!!

## வேலை வாய்ப்பைபறிக்காதே!!!

தமிழக மின்வாரியத்தில் 3 கோடியே இருபது லட்சத்திற்கு மேற்பட்ட மின் இணைப்புகள் உள்ளது. இதில் இரண்டு கோடிக்கு மேல் வீட்டு மின் இணைப்புகள் உள்ளது. தடையற்ற மின்சாரத்தை வழங்க களப்பிரிவில் 23,000 காலிப்பணியிடங்கள் உள்ள காரணத்தால் உரிய காலத்தில் மின்சாரம் கொடுக்க இயலாத நிலை ஏற்பட்டுள்ளது.

இந்த சூழலில் புதியதாக மூன்று மண்டல அலுவலகங்கள் உருவாக்க திட்டமிடப்பட்டு அதற்கான பணிகள் நடைபெற்று வருகிறது. மண்டல தலைமை பொறியாளரை பதவி உயர்வின் மூலம் நியமிக்காமல் ஏற்கனவே வேறு பிரிவுகளில் பணிபுரியும் தலைமை பொறியாளரை Redeployment முறையில் பணியமர்த்த திட்டமிடப்பட்டுள்ளதாக செய்திகள் வருகிறது. மண்டல தலைமை பொறியாளர் அலுவலகத்தில் செயற்பொறியாளர்/பொது, உதவி செயற்பொறியாளர்கள், முதுநிலை நிர்வாக அலுவலர், நிர்வாகப்பிரிவு, கணக்கு பிரிவு பணியாளர்களை நியமிக்க வேண்டிய நிலையில் ஏற்கனவே உள்ள பணியாளர்களை Redeployment முறையில் பணியமர்த்துவது கூடுதல் பணிச்சுமையை Redeployment செய்யப்பட்ட இடத்தில் உருவாகும்.

நிர்வாக வசதிக்காக மின்நுகர்வோர் சேவைகளை மேம்படுத்த புதிய அலுவலகங்கள் தேவை தான். ஏற்கனவே புதியதாக நிர்மானம் செய்யப்பட்ட துணை மின் நிலையங்களுக்கும் 63 பிரிவு அலுவலகங்களுக்கும் பொறுப்புகள் அனுமதிக்காத காரணத்தால் பணிகள் செய்வதில் கூடுதல் சுமை ஏற்பட்டுள்ளது. அரசின் துறைகளில் வேலை வாய்ப்புகளை அதிகரிக்க அரசும், வாரியமும் கவனத்தில் கொள்ள வேண்டும். சமூகத்தில் பின்தங்கிய மக்களை இடஒதுக்கீட்டின் மூலம் அரசுதுறைகளில் வேலை வாய்ப்பு வழங்குகின்ற பொழுது பொருளாதார ரீதியாக முன்னேறும் வாய்ப்புள்ளது. சமூக நீதியைப்பற்றி கூடுதலாக பேசும் தமிழக திமுக அரசு செயல்படும் என்ற நம்பிக்கை பொய்த்து போய் விடுமோ என்ற அச்சம் எழுந்துள்ளது.

மின்வாரிய நிர்வாகமோ வடசென்னை அனல் மின் உற்பத்தி நிலையம் நிலை -3 ஐ முழுமையாக அவுட்சோர்சிங் முறையில் இயக்க முடிவு செய்துள்ளதாக தெரிகிறது. ஏற்கனவே நிலை (Stage) 2-ல் அவுட்சோர்சிங் முறை அமல்படுத்தப்பட்டுள்ளது. இதைப் பின்பற்றி தேவையுள்ள துணை மின் நிலையங்களில் அவுட்சோர்சிங் முறையைப் புகுத்த மின்வாரிய நிர்வாகம் முயற்சித்து வருவதாக தெரிய வருகிறது. இது தமிழக அரசின் அரசாணை எண் 950-க்கு எதிரானது.

எனவே தமிழக அரசும், மின்வாரிய நிர்வாகமும் Redeployment முறையில் நியமிப்பதை கைவிட்டு தொழிற்சங்கங்களோடு பேசி தீர்வு காண்பதோடு தொழில் உறவையும், தொழில் அமைதியையும் பாதுகாக்க வேண்டுமென விரும்புகிறோம்.

# தமிழ்நாடு மின் ஊழியர் மத்திய அமைப்பு

(பதிவு எண். 158/சி.பி.டி.- அங்கீகாரம் பெற்றது - இணைப்பு : CITU & EEFI)
E-mail : coteecitu@gmail.com

27, மசூதி தெரு
சேப்பாக்கம்
சென்னை - 600 005
போன் : 044-28548529

| தலைவர் | பொதுச் செயலாளர் | பொருளாளர் |
|---|---|---|
| **தி. ஜெயசங்கர்** | **எஸ்.இராஜேந்திரன்** | **எம்.வெங்கடேசன்** |


**நாள்: 15.11.2021**

பெறுநர்

**தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் அவர்கள்,**

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,

144, அண்ணாசாலை, சென்னை 600 002

ஐயா,

வணக்கம்

பொருள் : மின்வாரியத்தில் பதவி உயர்வு, இடமாறுதல் உத்தரவுகள் வழங்காதது - தொடர்பாக

தமிழ்நாடு மின்சார வாரியத்தில் ஊழியர்கள், அலுவலர்கள் மற்றும் பொறியாளர்களுக்கு முறையாக வர வேண்டிய பதவி உயர்வுகள் உரிய காலத்தில் வழங்கப்படுவதில்லை. தகுதி காண் அறிக்கை கோரப்பட்டும். துறைரீதியான பதவி உயர்வுகுழு கூடி (DPC) தகுதி உள்ளவர்களை தயார் செய்து பட்டியல் வெளியிடுவதிலும் தேவையற்ற காலதாமதம் ஏற்படுகிறது. அதே போல பதவி உயர்வுக்கான தேர்வு பட்டியல் வெளியிட்டு ஓராண்டு முடிவடையும் நிலையில் வாய்ப்பிருந்தும் பதவி உயர்வு வழங்காத காரணத்தால் பேனலும் காலவதியாகிறது. இதனால் பணியாளர்களுக்கு பணிச்சுமை அதிகரிக்கிறது.

கீழ்கண்ட பதவிகளில்

1. உதவி நிர்வாக அலுவலர் பதவி ஜூன் மாதத்தில் நான்கு காலி பணி இடம் இருந்தும் (தற்போது எட்டு) பதவி உயர்வுக்கான கோப்பில் தலைமை பொறியாளர், பணியமைப்பு கையெழுத்திடாத காரணத்தால் பதவி உயர்வு வாய்ப்பு பறிக்கப்பட்டு அவர்களுக்கு ஆண்டு உயர்வு (Quarter Benefit) பாதிக்கப்பட்டுள்ளது.
2. இளநிலை உதவியாளர் நிர்வாகம் மற்றும் கணக்கு பதவியில் இருந்து உதவியாளர் நிர்வாகம் மற்றும் கணக்கு பதவி உயர்வு பல மாதங்களாக மறுக்கப்பட்டு வருகிறது. இந்த பணியாளர்கள் எற்கனவே வாரியம் வழங்கிய அடுத்த பதவி உயர்வுக்கு மூன்றாண்டுகள் என்று சொன்னதின் அடிப்படையில் பாதிக்கப்பட்ட ஊழியர்கள். இவர்களுக்கு பதவி உயர்வு வழங்காத காரணத்தால் அந்த அந்த மின் வட்டங்களில் கருணை அடிப்படையில் வாரிசு வேலைக்கு இளநிலை உதவியாளர் (நிர்வாகம்) பதவிக்கு தேர்வானவர்கள் சென்னை தலைமையகத்திற்கும் வேறு மின் வட்டங்களுக்கும் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.
3. கணக்கீட்டாய்வாளரிலிருந்து வருவாய் மேற்பார்வையாளர் பதவி உயர்வு சுமார் 800 காலி பணி இடங்கள் இருந்தும் DPC முடிவடைந்தும் நிரப்பப்படாமல் உள்ளது.
4. மேற்பார்வை பொறியாளர் பதவிகள் 22 பணி இடங்கள் காலிப்பணி இடங்களாக இருந்தும் பல மாதங்களாக நிரப்பப்படாமல் உள்ளது. இதனால் மேற்பார்வை பொறியாளர் பொறுப்பில் தற்காலிகமாக இருக்கும் மேற்பார்வை பொறியாளர்களால் பணியாளர்களின்

கோரிக்கைகள் மற்றும் தொழில்நுட்ப ரீதியான பிரச்சனைகளில், முடிவெடுக்க முடியாமல் உள்ளனர். இந்த பதவியின் முக்கியத்துவத்தை உணர்ந்து உடனடியாக நிரப்பிட வேண்டும்.

5. கடந்த 24.08.2021 அன்று மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்கள் தொழிற்சங்கங்களோடு நடத்திய பேச்சுவார்த்தையின் இறுதியில் உதவி செயற் பொறியாளரிலிருந்து செயற்பொறியாளர் பதவி உயர்வு நாளை அதாவது 25.08.2021 அன்று வழங்கப்படும் என அறிவித்தார். அமைச்சர் அறிவித்தும் இரண்டரை மாதங்கள் கடந்த நிலையில் 50-க்கும் மேற்பட்ட செயற்பொறியாளர் பதவி காலி பணியிடம் இருந்து நிரப்பப்படாதது வாரியப்பணிகளில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

6. உதவி செயற்பொறியளார் பதவி 100-க்கும் மேற்பட்ட காலிப்பணி இடம் இருந்தும் நிரப்பாமல் இருப்பது கவலை அளிக்கிறது.

7. உதவியாளர் (கணக்கு) லிருந்து கணக்கு மேற்பார்வையாளர், கணக்கு மேற்பார்வையாளர் பதவியிலிருந்து உதவி கணக்கு அலுவலர் ஆகிய பதவிகள் நிரப்பாமல் இருக்கிறது.

8. விடுப்பட்ட பகுதிநேர பணியாளர்கள் சுமார் 1042 பேருக்கு நியமனம் உத்திரவு இன்னும் வழங்கப்படவில்லை, ஏறத்தாழ 2 ஆண்டுகளாக தொடர்ந்து பேசி, போராடி தற்போது தான் தங்களது பார்வைக்கு வந்துள்ளதாக அறிகிறோம். எனவே உடனடியாக உத்திரவு வழங்கப்பட வேண்டும்.

9. அதே போல அடிமட்ட புதிய பணி நியமனங்கள் இல்லாத காரணத்தால் பதவி உயர்வு பெற்றும் கீழ்மட்ட பணியினை செய்ய வேண்டிய சூழல் ஏற்பட்டு வருகிறது. இதனால் ஊழியர்கள் மத்தியில் மனச்சுமையும். மனச்சோர்வும் ஏற்பட்டுள்ளது.

   எனவே, உடனயாக ஏற்கனவே தமிழக அரசால் அறிவிக்கப்பட்ட 1,300 கணக்கீட்டாளர்கள், 2,900 ஐடிஐ படித்தவர்கள், இளநிலை உதவியாளர் 500 (கணக்கு), உதவிபொறியாளர் 600 மற்றும் தொழில்நுட்ப உதவியாளர் 500 ஆகிய அறிவிப்புகளை நடைமுறைப்படுத்தி காலிப்பணியிடங்களை நிரப்பிட வேண்டும். அதே போல களப்பிரிவில் ஒப்பந்த ஊழியர்களை அடையாளங்கண்டு 22.02.2018 முத்தரப்பு ஒப்பந்தத்தில் அடிப்படையில் தினக்கூலி ரூ 380/- ஐ வாரியமே வழங்கிட வேண்டும்.

**பணியிட மாறுதல்**

மின்வாரியத்தில் ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி 1 முதல் ஜனவரி 20 வரையிலும் ஜூலை 1 முதல் ஜூலை 15 வரையிலும் விருப்ப மாறுதல் விண்ணப்பம் வாரிய பணியாளர்களால் சமர்பிக்கப்பட்டு வருகிறது. இந்த விண்ணப்பங்களின் மீது நடவடிக்கை எடுத்து ஊர் மாறுதல் உத்தரவு வழங்குவதில் தேவையற்ற காலதாமதத்தை ஏற்படுத்துவதால் வாய்ப்புள்ள பணியாளர்கள் தங்களது செல்வாக்கை பயன்படுத்தி உத்திரவு பெற்றுக்கொள்கிறார்கள். இதனால் விண்ணபித்த பணியாளர்கள் தகுதியிருந்தும் பாதிக்கப்படுகின்றனர்.

எனவே, தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குனர் அவர்கள் இக்கடிதத்தின் மீது உரிய நடவடிக்கை எடுத்து அனைத்து பதவி உயர்வுகளையும், இடமாறுதல் உத்தரவுகளையும் வெளியிட வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறோம்.

தொழில் அமைதியையும், தொழில் உறவையும் பாதுகாத்திட தாங்கள் நடவடிக்கை எடுப்பீர்கள் என நம்புகிறோம்.

தங்கள் உண்மையுள்ள

**(எஸ்.இராஜேந்திரன்)**
பொதுச்செயலாளர்



# பருவநிலை மாற்றமும் பூமிபந்தும்!

பருவநிலை மாற்றத்திற்கு யார் காரணமென்று கடந்த 25 ஆண்டுகளாக உலக நாடுகள் ஒருவரை ஒருவர் குற்றம் சொல்லி வந்தனர். 2010 ஆம் ஆண்டு அண்டார்ட்டிக் வடதுருவத்தில் பனிமலைகள் உருக ஆரம்பித்த பிறகு கடல் மட்டம் உயரும் என்ற பயத்தின் காரணமாக உலக நாடுகள் ஒன்று கூடி புவி வெப்பமயமாதலை தடுத்து நிறுத்திட வேண்டுமென்று தொடர்ந்து பேசி வருகின்றனர். அதிலும் குறிப்பாக ஜி 20 நாடுகளின் கூட்டமைப்பு இது தொடர்பாக தொடர்ந்து விவாதித்து வருகிறது.

புவி வெப்ப மயமாதல் என்ற ஆபத்தான நிகழ்வு என்பதும் ஒவ்வொரு நாளும் அதிகரித்துக் கொண்டே வருகிறது. புவி வெப்ப மயமாதல் என்பது பருவநிலை மாற்றமடையச் செய்கிறது. பருவம் தவறி மழை பொழிகிறது போன்ற இயற்கையான விஷயங்களாக கூட பாதிப்படையச் செய்வதால் எதிர்காலத்தில் பூமிபந்தில் மக்கள் வாழ்வதற்கான சாத்தியக் கூறுகளை குறைத்துக் கொண்டே வருகிறது, இந்த பருவநிலை மாற்றக்காரணிகளே என்று விஞ்ஞானிகள் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றனர். விஞ்ஞானிகள் எச்சரிக்கைகளை வளர்ந்த நாடுகள் புரிந்து கொண்டு அதற்கான பாதுகாப்பு நடவடிக்கைகளை எடுக்க வேண்டிய காலத்தில் நாம் நிற்கின்றோம் என்பதை ஜி 20 நாடுகள் உணர்ந்துள்ளதாக அறிய முடிகிறது. இதன் ஒரு பகுதியாக ஸ்காட்லாந்தில் உள்ள கிளாஸ்கோ நகரில் ஐ.நா. சார்பாக நடைபெற்ற பருவநிலை மாற்ற உச்சி மாநாடு கடந்த 11.2021 அன்று நடைபெற்றது. இதில் 120 நாடுகள் பங்கேற்று கரியமிலவாயு வெளியேற்றுவதை பூஜ்ஜியமாக்குவது என்று விவாதித்தன.

இந்த உச்சி மாநாட்டில் இந்திய பிரதமர் நரேந்திரமோடி அவர்களும் கலந்து கொண்டார். சீனா மற்றும் அமெரிக்காவிற்கு பிறகு இந்தியாதான் அதிக கரியமில வாயுவை வெளியிட்டு வருகிறது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. பருவநிலை உச்சிமாநாடு துவங்குவதற்கு முன்பாக பசுங்குடில் வாயு “GREEN HOUSE GAS” வெளியேற்றம் திட்டத்தை இந்தியா அறிவித்தது.

எலெக்ட்ரிக்கல் ஸ்கூட்டர், பைக், பஸ் ஆகியவற்றை அறிமுகப்படுத்துவது பெட்ரோல், டீசல் வாகனங்களை குறைப்பது இதன் மூலம் 2030-ம் ஆண்டுக்குள் கார்பன் வெளியேற்றத்தை

60 சதத்திலிருந்து 35 சதவீதமாக குறைக்க திட்டமிட்டுள்ளதாக இந்திய பிரதமர் நரேந்திர மோடி அறிவித்தார்.

பிரதமரின் இந்த அறிவிப்பு பிரமாதமாக (Super) இருந்தாலும், அதற்கான குறிப்பான செயல்திட்டம் ஏதுமில்லை என்று சமூக ஆர்வலர்கள் விமர்சிக்கின்றனர்.

நாடுகளுக்கிடையேயான கரியமில வாயு வெளியேற்றத்தை 2050-ம் ஆண்டுக்களுள் பூஜ்ஜியமாக கொண்டு வந்தால் மட்டுமே புவியின் வெப்ப நிலையில் 1.5 டிகிரி செல்சியஸ்ல் வைத்திருக்க முடியும் என விஞ்ஞானிகள் கருதுகின்றனர். புவி வெப்பமயமாதல் விளைவாக கடந்த பத்தாண்டுகளில் தமிழகத்தில் பருவநிலை மாற்றத்தால் தொடர்சியான காற்றழுத்த தாழ்வு மண்டலம் உருவாகி 2013-ம் ஆண்டு தானே புயல், நீலம் புயல், 2015-ல் சென்னை பெருவெள்ளம், 2016-ல் வர்தா புயல், 2017-ல் ஒக்கி புயல், 2018-ல் கஜாபுயல் அதன் பிறகு 2021-ல் தொடர் கடும் மழை, சிவப்பு நிற அபாய எச்சரிக்கையுடன் தொடர் கடும் மழை பெய்துள்ளது.

இந்த பாதிப்புகளை எல்லாம் தமிழகம் சந்தித்துள்ளது. தமிழ்நாட்டில் கடலோர பகுதிகளில் 10 ஆண்டுகளுக்குள் சுமார் 0.1 முதல் 0.2 டிகிரி என்ற விகிதத்தில் வெப்பநிலை உயருகிறது என்பதையும் கணக்கில் கொள்ள வேண்டும். தென் இந்தியாவில் இதுவரை கடும் வெப்ப அலைகள் வீசியதில்லை. ஆனால் பருவ நிலை மாற்றத்தின் விளைவாக 21-ம் நூற்றாண்டின் இறுதிக்குள் கடும் வெப்ப அலைகள் தென்இந்தியா முழுவதும் வீசக்கூடும் என விஞ்ஞானிகள் கருதுகின்றனர்.

புவிவெப்பமயமாதல் காரணமாக உலகிலேயே வேகமாக கடலில் மூழ்கி வரும் நகரம் இந்தோனிஷியா தலைநகரம் ஜகார்த்தாவாகும். இந்நகரம் ஆண்டுக்கு சராசரியாக 10 சென்டிமீட்டர் கடலில் மூழ்கி வருகின்றது என்று விஞ்ஞானிகள் எச்சரிக்கின்றனர். இதே நிலை தொடர்ந்தால் அடுத்த 9 ஆண்டுகளில் புவியின் வெப்பநிலை 1.5 செல்சியஸ் உயரும் என ஐ.நா. பருவநிலை மாற்றத்திற்கான குழு எச்சரிக்கை செய்கிறது. புவி வெப்பம் அடைவதால் மனிதகுலம் பேராபத்துக் களை சந்திக்க இருக்கிறது என ஸ்காட்லாந்து நகரில் நடைபெற்ற மாநாட்டில் “ Red Alert ” கொடுக்கப்பட்டுள்ளது.

அமெரிக்கா, துருக்கி, பொலிவியா, கிரிஸ் உள்ளிட்ட நாடுகளில் கட்டுக்கடங்காத காட்டுத்தீ ஒரு புறம், சீனாவின் பெருமழை வெள்ளம் மறுபுறம். அதே நேரம் வறட்சியின் பிடியில் தவிக்கும் ஆப்பிரிக்க நாடுகள், பருவம் தவறிய மழை இப்படியாக உலக நாடுகள் வழக்கத்திற்கு மாறான இத்தகைய நிகழ்வுகளுக்கு புவிவெப்பமயமாதலும், பருவநிலை மாற்றமும் தான் காரணம் என விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

பூமி பந்தை தனது லாப வெறிக்காக முதலாளித்துவம் சூறையாடிக் கொண்டிருக்கிறது என்பதை தொழிலாளி வர்க்கம் வேடிக்கை பார்க்கக் கூடாது. கடல்வளம், காடுகள் வளம், நிலக்கரி வளம் போன்ற இயற்கை வளங்களை சூறையாடும் கார்ப்பரேட்டுகளையும், அதற்கு காரணமாக இருக்கின்ற அரசையும் எதிர்த்து நாம் ஒன்றிணைந்து போராடுவது இன்றியமையாத ஒன்றாகும். புவிவெப்பமயமாதலும்,பருவநிலை மாற்றமும் எதிர்காலத்தில் மனித வாழ்வை புதை குழியில் தள்ளும் நிகழ்வாக மாறப்போகிறது என்ற ஆபத்தை உணர்ந்து கார்ப்பரேட்டுகளையும், முதலாளித்துவ அரசாங்கத்தையும் எதிர்த்து போராடுகின்ற அதே நேரம் அந்த சீர்கேட்டின் ஒரு சிறு பகுதியாக மக்களிடம் உள்ள நடைமுறை பழக்கங்களையும், வழக்கங்களையும் மாற்றுவதற் கான நடைமுறைகளை நாம் செய்திட வேண்டும். உதாரணமாக பிளாஸ்டிக் பொருட்களை தவிர்த்தல், மின்சார வண்டிகளை பயன்படுத்துதல், மரங்களை பாதுகாத்தல், மரகன்றுகளை நடுதல், நீர் நிலைகளை பாதுகாத்தல், ஆறுகளை பாதுகாத்தல் போன்ற நம்மோடு அன்றாடம் புழங்குகின்ற சில விஷயங்களில் மாற்றத்தை ஏற்படுத்தினால், விழிப்புணர்வை ஏற்படுத்தினால் அது சமூகத்தின் மாற்றமாக பின்வரும் நாட்களில் மாறும். சமூக மாற்றமே அரசியல் மாற்றமாக மாறும் என்ற பாதையை நோக்கி நமது பணிகளை செய்வோம். மாற்றத்தை நம்மிடமிருந்து துவக்குவோம். மாற்றமே நிலையானது.

**- தி.ஜெயசங்கர்**

# கோடிக்கால் பூதமடா..!



இந்தியா மட்டுமல்ல உலகத்தில் எந்த மூலையிலும் நடைபெறாத ஒரு போராட்டம், நீண்ட நெடிய ஓராண்டு போராட்டம், லட்சக் கணக்கானோர் கலந்து கொண்ட போராட்டம், ஒரு நாட்டின் தலை நகரையே முற்றுகையிட்டப் போராட்டம், அகிம்சா வழியில் நடந்த போராட்டம் எது என்று சொன்னால் அது இந்திய விவசாயிகளுடைய ஒன்றுபட்ட போராட்டம் என்று சொன்னால் மிகைப்படுத்துவதாக அமையும். பி.பி.சி. உட்பட உலகத்தின் முன்னணி ஊடகங்கள் அனைத்தும் சொன்னது இந்திய விவசாயிகள் போராட்டத்திற்கு முன்பாக மோடி அரசு, ஒன்றிய அரசு சாரணாகதி அடைந்தது என்பது தான் தலைப்பு செய்தியாகும்.

கடந்த இரண்டு நூற்றாண்டுகளில் அதிக எண்ணிக்கையில் கலந்து கொண்டு வலுவான ஒன்றிய அரசை பின்வாங்கச் செய்தது விவசாயிகள் போராட்டமே. இந்த போராட்டம் தொழிலாளி வர்க்கத்திற்கு நம்பிக்கையூட்டுவதாக உற்சாகம் அளிப்பதாக உள்ளதும் பாஜக அரசுக்கு இந்த பின்னடைவு விவசாயிகளின் போராட்டம் ஏற்படுத்திய ஒரு துவக்கப்புள்ளி தான். ஏனெனில் மின்சாரம், வங்கி, காப்பீடு, இரயில்வே, துறைமுகம், தேசியநெடுஞ்சாலை, போக்குவரத்து, இராணுவ தளவாட தொழிற்சாலைகள், உள்ளிட்ட அனைத்து பொதுத்துறைகளையும் தனியாரின் இலாப வேட்டைக்கு அளித்து இந்திய மக்களை மொட்டை அடிக்கின்ற ஒன்றிய அரசை எதிர்த்து 500-க்கும் மேற்பட்ட விவசாயிகள் சங்கங் களைப்போல நாமும் ஒன்று பட்டு மக்களை ஒன்று திரட்டி நீண்ட நெடிய போராட்டத்திற்கு நாம் தாயாராகவில்லை என்று சொன்னால் இந்தியாவின் பொதுத்துறைகளை தனியாருக்கு கொடுப்பதை நம்மால் தடுத்து நிறுத்த இயலாது. ஒற்றுமைக்கட்டி போராடுவதன் மகத்துவத்தை விவசாயிகள் நமக்கு உணர்த்தியுள்ளனர். நம்மை நோக்கி வரும் ஆபத்தை எதிர்கொள்ள தயாராக வேண்டியுள்ளது.

விவசாயிகள் போராட்டம் தவறு என்று சொன்ன முன்னாள் முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமி அவர்களுடம் அந்தர்பல்டி அடித்து தனது கருத்தை மாற்றிக்கொண்டார். பாஜக பரிவாரம் போராட்டத்தைக் கண்டு பின் வாங்கியுள்ளது. தொழிலாளி வர்க்கம் செய்ய வேண்டியது இது போன்ற போராட்டத்தை முன் எடுப்பதும், பொதுத்துறைகளை பாதுகாக்கின்ற அந்த போராட்டத்திற்கு எந்த கட்சிகள் ஆதரவளிக்கின்றதோ அந்த கட்சிகளுக்கு ஆதரவளிப்பதும், வாக்களிப்பதுமாக போராட்ட வடிவங்கள் மாறுகின்ற பொழுது அரசியல் கட்சிகளும், ஆட்சியாளர்களும் மக்கள் மன்றத்தின் முன்பாக தொழிலாளி வர்க்கத்தின் முன்பாக மண்டியிடுவார்கள். பல தொழிற்சங்க இயக்கங்கள் தொழிற்சங்கம் வேறு அரசியல் வேறு என்று தொழிலாளி வர்க்கத்திற்கு வர்க்க அரசியலை கற்றுத் தராமல் இருக்கின்றார்கள்.

தொழிற்சங்கம் என்பது தொழிலாளிகளை

பாதுகாக்கின்ற முதல் கடமையை செய்ய வேண்டியது அவசியம். அதைவிட மிகமுக்கியம் தொழிலாளி வேலை செய்யும் நிறுவனத்தை பாதுகாக்க வேண்டியதாகும். நிறுவனத்தை பாதுக்காமல் நிறுவனத்தில் வேலை செய்யும் ஊழியர்களையோ, அவர்களின் குடும்பத்தையோ பாதுகாக்க முடியாது என்ற உண்மையை அரசியல் வேண்டாம் என்று சொல்லும் தொழிற்சங்கங்கள் உணர்ந்தும் உணராமல் உள்ளனர். அதனால் தான் அப்படிப்பட்ட சங்கங்கள் அரசு அதிகாரத்தைப் பற்றியோ, அரசு இயற்றிய சட்டங்களைப் பற்றியோ புரிதல் இல்லாமல் உள்ளனர். அரசாங்கம் சட்டம் இயற்றி விட்டால் அந்த சட்டத்தை யாராலும் மாற்ற இயலாது என்று சொன்ன ஒரு சில தொழிற்சங்கத்தலைவர்கள் விவசாயிகள் போராட்டத்தின் மூலமாக வேளாண் சட்டங்கள் ரத்து செய்யப்பட்டதை கண்டு வாயடைத்துள்ளனர். இதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை.

சில ஆயிரம் ஊழியர்களை வைத்துக் கொண்டு ஒற்றை கோரிக்கைக்காக தனித்தனியாகப் போராடாமல் லட்சம் ஊழியர்களை ஒன்று திரட்டி, லட்சியத்தை நோக்கி போராடினால் எந்த ஆட்சியாளரும் ஆடிப்போவார்கள். ஏன் என்று சொன்னால் பல லட்சம் தொழிலாளிகளின் ஓட்டுகளையும், அவர்களின் குடும்ப ஓட்டுகளையும் அவர்கள் இழக்க தயாராக இருக்க மாட்டார்கள். ஓட்டு வங்கியின் மீது கட்டப்பட்ட அரசியல் சாம்ராஜ்ஜியம், ஆட்சி அதிகாரம் இவை இரண்டும் காணாமல் போய் விடும் என்ற பயம் அவர்களுக்கு எற்படும். முதலாளித்துவ அரசியலுக்கு மக்கள் நலன் சார்ந்த கொள்கை கோட்பாடு கிடையாது. அவர்களுக்கு உள்ள ஒரே கொள்கை, பிரதான கொள்கை வாக்கு வங்கியும், அரசியல் செல்வாக்கும் சரியாமல் இருக்க வேண்டும். இதற்காக இவர்கள் எந்த கொள்கையையும் சமரசம் செய்து கொள்வார்கள்.

பொதுத்துறை நிறுவனங்களை பாதுகாக்கின்ற போராட்டம் மட்டுமல்ல தொழிலாளி வர்க்கத்தின் பெரும்பகுதியாக உள்ள முறைசாரா தொழிலாளர்களின் நலன் காத்திடவும், வியாபாரக் கல்வி ஒழித்து, வறுமை ஒழித்து, பொது சுகாதாரம் மேம்படுவதற்காக, வேலை வாய்ப்பை பெருகுவதற்காக போராடுகின்ற அந்தப் போராட்டம், தொழிலாளி வர்க்கத்தால் தலைமை தாங்கப்படுமேயானால் மத்திய மாநில ஆட்சியாளர்கள் நமது கோரிக்கையை ஏற்றுக்கொண்டே ஆக வேண்டும். பெரும் பகுதி தொழிலாளர்களின் நலனை புறக்கணித்து விட்டு, எந்த ஆட்சியாளரும் ஆட்சி நடத்திட முடியாது.

மக்களுக்கு நன்மை செய்வேன் என்று ஆட்சிக் கட்டிலில் அமர்ந்தவர்கள் ஆட்சி அதிகாரத்திற்கு வந்த பிறகு மக்களின் மறதியை பயன்படுத்தி, மக்களின் அறியாமையை பயன்படுத்தி, அவர்களின் ஒற்றுமையின்மையை பயன்படுத்தி மக்களுக்கான நன்மைகளை செய்ய முற்படுவதில்லை. மக்கள் ஒன்றிணைய மாட்டார்கள், அவர்கள் போராடமாட்டார்கள், வாக்குகளை விற்றவர்கள் அரசுக்கு எதிராக போராட வரமாட்டார்கள் என்ற எண்ணங்களே ஆட்சியாளர்களின் பலமாகும், தொழிலாளி வர்க்கத்தின் பலவீனமும் அதுவாக உள்ளது.

அறியாமை, இருளை அகற்றி, ஒற்றுமையின்மை என்ற தடைகளை உடைத்து ஒற்றை கோரிக்கையாய் லட்சம் லட்சமாய் லட்சியத்தை முன்வைத்து போராட்டக்களம் கண்டால் எந்த ஆட்சியாளரும் போராட்டத்தின் முன்பாக சரணாகதி அடைவார்கள் என்பது வரலாறு

மின்துறை உள்ளிட்ட அனைத்து பொதுத்துறைகளை பாதுகாக்கின்ற போராட்டமும் இதை நோக்கியே பயணம் செய்ய இருக்கிறது. ஒன்றிய அரசுக்கு எதிரான போராட்டங்கள் நீண்ட நெடிய நாட்களாக இருந்து வந்த போதும் இறுதி வெற்றி என்பது மக்களுக்கே, தொழிலாளிக்கே என்பது தான் வரலாறு, மின்சார வாரியத்திலும், இது போன்ற ஒற்றுமையைக் கட்டி வரலாறு படைக்க தயாராவோம்.

**- தி.ஜெயசங்கர்**





# தோழர் எஸ்.பஞ்சரத்னம்
## படத்திறப்பு நிகழ்ச்சியும், நினைவேந்தல் கூட்டமும்

தமிழ்நாடு மின் ஊழியர் மத்திய அமைப்பின் மூத்த தலைவர் எஸ்.பி.ஆர் என்று அனைவராலும் அன்புடன் அழைக்கப்பட்ட தோழர் எஸ்.பஞ்சரத்னம் படத்திறப்பு நிகழ்ச்சியும், நினைவேந்தல் கூட்டமும் மாநிலத் தலைவர் தி.ஜெய்சங்கர் தலைமையில் சென்னையில் சனிக்கிழமை நவம்பர் 27 அன்று நடைபெற்றது.

அவரது படத்தை சி.ஐ.டி.யு. மாநிலத் தலைவர் அ.சவுந்தரராசன் திறந்து வைத்து பேசுகையில், அவரது இழப்பு மின்ஊழியர் மத்திய அமைப்புக்கு மட்டுமல்ல, ஒட்டுமொத்த தொழிற்சங்கத்திற்கே இழப்பு என்றார். சிஐடியு முடிவின் அடிப்படையில் மின் வாரியத்தில் ஒப்பந்த தொழிலாளர்களை பாதுகாக்க நிரந்தர தொழிலாளர்களை திரட்டி வெற்றிகரமாக போராடியவர். வழக்கு குறித்து நுணுக்கமாக எடுத்துரைப்பார். மாநில பொதுத்துறை நிறுவனங்களில் ஒப்பந்த தொழிலாளர்களை அணி திரட்டு வதற்கு, அவர் நடத்திய வழக்குகள் உந்துசக்தியாக இருந்தன. தொழிலாளர்களை அரசியல் ரீதியாக அணி திரட்டுவதில் அவரது பங்கு மகத்தானது. அதிகாரிகளிடம் உறுதியாக வாதிடுவார். சிறந்த பேச்சாளர், கிளர்ச்சியாளர். அவர் எந்த லட்சியத்தை ஏற்றுக்கொண்டு தனது இறுதி மூச்சு வரை பாடுபட்டாரோ, அந்த லட்சியத்தை நிறைவேற்ற அனைவரும் ஒன்றிணைந்து போராடுவோம் என்றார்.

ஸ்தாபக தலைவர் வே.மீனாட்சி சுந்தரம் பேசுகையில், தோழர் பஞ்சரத்தனம் அங்கீகரிக்கப்பட்ட திமுகசங்கத்தில் இருந்து விலகி, அங்கீகரிக்கப்படாத மின் ஊழியர் மத்திய அமைப்பில் இணைத்துக் கொண்டவர். அதற்கு காரணம் அவர் ஆரம்பகாலத்திலேயே மிகவும் மார்க்சிய கொள்கை பிடிப்புடன் இருந்ததுதான். மின் ஊழியர் மத்திய அமைப்பை பேச்சுவார்த்தைக்கு அழைக்க மாட்டார்கள். சாலை மறியல், வேலை நிறுத்தம் நடத்தினால் தான் அதிகாரிகள் பேச்சுவார்த்தைக்கு அழைப்பார்கள். அதற்காக திட்டமிட்டு தொழிலாளர்களை திரட்டி போராட்டத்தில் அவர் ஈடுபட்டார். தொழிலாளர்கள் அரசியல் ரீதியாக போராடவில்லை என்றால் நீதிமன்றத்தால் கூட தொழிலாளர்களை காப்பாற்ற முடியாது என்று அவர் எச்சரித்தார்.

சி.ஐ.டி.யு. அகில இந்திய துணைத் தலைவர் ஏ.கே.பத்மநாபன் பேசுகையில், வருங்காலங்களில் தொழிலாளர்களின் மீதான அரசின் தாக்குதல்கள் இன்னும் கடுமையாக இருக்கும். தொழிற்சங்க இயக்கம் சந்திக்கக் கூடிய சவால்களை எதிர்கொள்ள ஸ்தாபனத்தை வலுப்படுத்துவது அவசியம். தொழிலாளர்களை சமூக பார்வை உள்ளவர்களாக மாற்ற வேண்டும். கொள்கை ரீதியான தாக்குதல்கள் அதிகரித்து வரும் சூழலில், அரசியேலோடு இணைந்த போராட்ட ங்களை முன்னெடுக்க வேண்டும். அதுவே நாம் அவருக்கு செலுத்தும் முழுமையான அஞ்சலியாகும் என்றார்.

சிஐடியு மாநில பொதுச்செயலாளர் ஜி.சுகுமாறன் பேசுகையில், தோழர் பஞ்சரத்னம் மின் ஊழியராக பணியில் சேராமல், வழக்கறிஞர் பணிக்கு சென்றிருந்தால், மிகச்சிறந்த வழக்கறிஞராக திகழ்ந்திருப்பார். வழக்கறிஞர்களுக்கே நுணுக்கமான தகவல்களை வழங்குவார். அவர் ஒரு கோட்டு போடாத வழக்கறிஞர் என்று புகழாரம் சூட்டினார். சிஐடியு எடுத்த முடிவுகளை முழுமையாக மின் அரங்கத்தில் அமல்படுத்தியவர். பிரச்சினைகளை மிகவும் எளிமையாக தொழிலாளர்களிடம் விளக்கும் ஆற்றல் படைத்தவர். புதிய இளம் தோழர்களை அரவணைத்து பொறுப்பு வழங்குவார். அவருடைய நோக்கங்களைள் நிறைவேற்றும் வகையில் நம்முடைய பணிகளை முன்னெடுப்போம் என்றார்.

மின் ஊழியர் மத்திய அமைப்பின் மாநில பொதுச்செயலாளர் எஸ்.ராஜேந்திரன் பேசுகையில், 1993 ஆம் ஆண்டு திருநெல்வேலியில் மாநாடு நடைபெற்றபோது ஒப்பந்த தொழிலாளர்களின் போராட்டம் வீரியமாக இருந்தது. மாநாட்டு விவாதத்தின்

போது, மின்சார வாரியத்தில் ஒப்பந்த தொழிலாளர்களை நிரந்தரப்படுத்த வேண்டும் என்றால், தோழர் எஸ்.பி.ஆர். தனது பணியை ராஜினாமா செய்து விட்டு முழுநேர சங்க பணியாற்ற வேண்டும் என ஒருமித்த குரலாக ஒலித்தது. அதையே வேண்டுகோளாக டி.கே. ரங்கராஜனும் முன்வைத்தார். பிரதிநிதிகள் வேண்டு கோளை ஏற்று பணியை ராஜினாமா செய்கிறேன் என்று அதே மாநாட்டில் தோழர் பஞ்சரத்தனம் அறிவித்தார். தோழர் எஸ்.பி.ஆர். நிர்வாகத்திற்கு எழுதிய கடிதங்கள் இன்றும் நமக்கு ஆவணமாக பயன்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்

நிகழ்ச்சியில் முன்னாள் தலைவர்கள் எஸ்.எஸ்.சுப்பிரமணியன், கே.விஜயன், மின்துறை பொறியாளர் அமைப்பின் மாநிலத் தலைவர் தோழர் ஜீவாநந்தம், முன்னாள் நிர்வாகிகள் து.கோவிந்தராஜ், கே.செல்லப்பன், ராமநாதன் ஆகியோரும்பேசினர்.

மாநிலப்பொருளாளர் தோழர் எம்.வெங்கடேசன் நன்றி கூறினார்.

நிகழ்ச்சியில் தோழர் எஸ்.பஞ்சரத்னம் துணைவியார் இந்திராணி, மகன் சண்முகம், மருமகள் மற்றும் பேரக்குழந்தை உள்ளிட்ட ஏராளமான தொழிலாளர்கள் கலந்து கொண்டனர்.



## டிசம்பர் -6
## அம்பேத்கர் நினைவு தினம்

தலித்துகளின் விடுதலைக்குப் பாடுபட்டவர், சுதந்திர இந்தியாவின் அரசமைப்புச் சட்ட வரைவுக் குழுவின் தலைவராக இருந்தவர். இவை இரண்டும்தான் அதிகம் அறியப்பட்ட அம்பேத்கரின் இரண்டு பக்கங்கள். இவை அம்பேத்கரின் முக்கியமான பங்களிப்புகள் என்பதில் ஐயமில்லை.

அவரது பணிகளும், வாழ்வும் மேலும் பல பரிமாணங்களை கொண்டவை. அமைச்சராக இருந்து பிரம்மாண்ட நீராதாரத் திட்டங்களை வகுத்தது, நதி நீர்ப்பங்கீடு தொடர்பாக இன்றும் பொருந்தும் கருத்துகளை வலியுறுத்தியது முதல் எட்டு மணி நேர வேலை உரிமை இந்தியாவில் அமலாகக் காரணமாக இருந்தது வரை பரந்த சமூகம் பலன்பெற அவர் செய்தவை பல.

சாதியோ, பொருளாதார நிலையோ ஒருவரின் கற்கும் ஆர்வத்தையும் அறிவார்ந்த சாதனைகளையும் தடுத்துவிட முடியாது என்கிற மிகப்பெரும் நம்பிக்கையே அவரது வாழ்க்கை. கல்வியாளராக, பொருளாதார நிபுணராக, தத்துவவாதியாக, வரலாற்றாளராக, அரசியல் செயற்பாட்டாளராக, தொழிலாளர்- பாசனம்- மின்சாரத்துறை அமைச்சராக, சட்ட அமைச்சராக அவர் ஆற்றிய பணிகள் இந்திய மக்கள் ஒவ்வொருவரின் தனிப்பட்ட வாழ்விலும் தாக்கம் செலுத்தியவை.

பொதுநிதி, வங்கித்துறை சீர்திருத்தங்கள் பற்றிய சமீபத்திய விவாதங்களில் அம்பேத்கரின் வழிகாட்டுதல் போற்றப்படுகிறது. ரிசர்வ் வங்கி உருவாக்கம், இன்சூரன்ஸ் அரசுடைமையாக்கம், மத்திய மின்தொகுப்பு, சுரங்கங்கள் மீதான அரசுரிமை, தொழில் மயமாக்கம் என்று தேசிய கட்டுமானத்தில் அவரது பங்களிப்பு எல்லையற்று விரிகிறது.

அடிப்படை ஆதாரவளமான நீர் குடிமக்களின் அன்றாடப் பயன்பாட்டிற்கும் பாசனத்திற்கும் நாட்டை வளப்படுத்துவதற்கும் தடையின்றி கிடைப்பதற்கான வழிவகைகளை ஆராய்ந்தார்.

இந்த நோக்கத்தில்தான் அவர் அமெரிக்காவின் டென்னஸி ஆற்றுப்பள்ளத்தாக்குத் திட்டத்தை முன் மாதிரியாகக் கொண்டு தாமோதர் ஆற்றுப் பள்ளத்தாக்குத் திட்டத்தைக் கொண்டுவந்தார். வெள்ளப் பெருக்கினால் வங்காளம், பீகார் மாநிலங்களில் தொடர்ந்து கடும் சேதாரங்களை உருவாக்கிவந்த தாமோதர் ஆற்றின் குறுக்கே பேரணையும் நீர்மின் உற்பத்திக்கூடமும் கட்டப்பட்டன.

ரயில் தடங்களைப் போலவே நதிகளும் மத்திய அரசின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு செல்லப்பட வேண்டும்- அதாவது நதிகள் தேசியமயமாக்கப்பட வேண்டும் என்கிற அம்பேத்கரது யோசனை, நதிநீர் பகிர்வுக்காக மாநிலங்கள் சண்டையிட்டுக் கொள்ளும் இந்நாளில் அருந்தீர்வாக நினைவு கூரப்படுகிறது. நாட்டின் நீர் மேலாண்மைக்கு அவர் ஆற்றிய பங்களிப்புகளுக்கு நன்றி செலுத்தும் விதிமாக தேசிய நீர் ஆணையம் Ambedkar's Contribution to Water Resources Development என்கிற ஆவணத்தை 1 993ல் வெளியிட்டது.

அம்பேத்கரை, தலித்துகளின் இடஒதுக்கீட்டுக்காகப் போராடியவர் அல்லது அரசியல் சாசனத்தை எழுதியவர் என்கிற சுருக்கப்பட்ட பிம்பமே வெகுமக்களுக்குள் பதியவைக்கப்பட்டுள்ளது. தேச உருவாக்கத்திற்கும் குடிமக்களின் நல்வாழ்விற்கும் அம்பேத்கர் ஆற்றிய பணிகள் இருட்டடிப்புச் செய்யப்பட்டுள்ளன. ஆனால் காலம் அவரது பன்முக ஆளுமையை தேடித்தேடி முன்னிறுத்துகிறது.

# தமிழ்நாடு மின்வாரிய தொழிற் சங்கங்களின்
# கூட்டு நடவடிக்கை குழு
# சென்னை

நாள்: 24.11.2021

பெறுநர்

**தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் அவர்கள்,**
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
144, அண்ணாசாலை, சென்னை 600 002
ஐயா, வணக்கம்

பொருள் : நிர்வாகம் - பணியாளர்களின் தீர்க்கப்படாத பல்வேறு கோரிக்கைகள் - தீர்க்கப்பட கோருதல் - தொடர்பாக

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தில் பணியாற்றும் ஊழியர்கள், பொறியாளர்கள் மற்றும் அலுவலர்கள் ஆகியோரின் பல்வேறு கோரிக்கைகள் மீது தொழிற்சங்கங்கள் தங்களிடம் பேச்சுவார்த்தை நடத்தியும் தீர்வு காணப்படவில்லை என்பது கவலை அளிக்கிறது.

1. மின்னகம் தொடர்பாக ஏற்கனவே தொழிற்சங்கங்கள் கூட்டாகவும் தனியாகவும் மின்வாரிய தலைவர் மற்றும் மாண்புமிகு மின்துறை அமைச்சர் ஆகியோரிடம் ஆலோசனைகளை கொடுத்திருந்தோம். ஆனால் இதன் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இதனால் ஊழியர்களும், பொறியாளர்களும் கடுமையான மன உளச்சலோடு பணியாற்றி வருகின்றனர்.

2. தளவாடப் பொருட்கள் பிரிவு அலுவலகத்தில் குறிப்பாக பியூஸ் ஒயர், காம்பவுண்ட் (Cable) ஜாயின்ட் கிட், ஏ.பி.சுவிட்ச், கேபிள் போன்றவை தட்டுப்பாடு உள்ளது. இதனால் பொருட்கள் இல்லாமலே பணியை செய்வதில் தேவையற்ற காலதாமதம் உருவாகிறது. இதனால் மின் நுகர்வோர் மத்தியில் வாரியத்திற்கு அவப்பெயர் உருவாகிறது.

3. மின்வாரிய ஆணை எண் 8 (கணக்குப்பிரிவு) நாள் 17.08.2021 மூலம் செயற்பொறியாளரிலிருந்து மண்டல தலைமைப் பொறியாளர் வரை ஏற்கனவே உள்ள Delecation Power-ல் அனுமதிக்கப்பட்ட தொகையை குறைக்கப்பட்டுள்ளது. இதனால் வாரிய பணிகள் கடுமையாக பாதித்துள்ளது. இது குறித்து கடந்த 24.08.2021 அன்று மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்களிடமும், மின்வாரியத் தலைவர் அவர்களிடமும் கடிதம் கொடுத்து பேசப்பட்டுள்ளது.

4. மின்வாரியத்தில் பணியாற்றும் ஊழியர்களுக்கும், பொறியாளர்களுக்கும் வழங்கப்பட வேண்டிய பதவி உயர்வுகள், அதாவது 22 மேற்பார்வை பொறியாளர் பதவிகள், 38 செயற்பொறியாளர் பதவிகள் 100-க்கும் மேற்பட்ட உதவி செயற்பொறியாளர் பதவிகள், கணக்கீட்டாய்வாளரிலிருந்து வருவாய் மேற்பார்வை பதவி உயர்வுகள், நிர்வாக மேற்பார்வையாளரிலிருந்து உதவி நிர்வாக அலுவலர், இளநிலை உதவியாளர்(கணக்கு) மற்றும் (நிர்வாகம்) பதவியிலிருந்து உதவியாளர் பதவிகள், உதவியாளர் கணக்கிலிருந்து

கணக்கு மேற்பார்வையாளர் பதவி உயர்வுகள் தொழில்நுட்ப உதவியாளரிலிருந்து இளமின் பொறியாளர் 2-ம் நிலை, பட்டயம் அல்லாத களப்பிரிவு பணியாளர்களிலிருந்து இளமின் பொறியாளர் 2-ம் நிலை, உள்முக தேர்வு மூலம் அனைத்து பதவி உயர்வுகள் மற்றும் நிர்வாகப்பிரிவில் பதவி உயர்வுகள் ஆகியவை பல மாதங்களாக வழங்கப்படாமல் இருப்பது பணியாளர்கள் மத்தியில் மனச்சுமையை அதிகரித்துள்ளது.

5. விருப்ப மாறுதல் விண்ணப்பங்கள் வாரிய விதிமுறைகளின் படி நடவடிக்கை எடுக்காமல் இருப்பது சரியல்ல, வெளிப்படைத் தன்மையோடு உத்தரவுகள் வழங்கப்பட வேண்டும் என சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

6. வேலைபளு ஒப்பந்தத்தின்படி உருவாக்கப்பட்ட 63 பிரிவு அலுவலகங்களுக்கும், புதியதாக உருவாக்கப்பட்ட துணை மின் நிலையங்களுக்கும், Redeployment செய்யப்பட்ட கட்டுமானம் உள்ளிட்ட இடங்களுக்கும் பதவிகள் அனுமதிட வேண்டும்.

   வழுதூர் மற்றும் குத்தாலம் எரிவாயு மூலம் மின் உற்பத்தி செய்யும் மின் நிலையங்களை அவுட்சோர்சிங் விடக்கூடாது.

7. மின்வாரிய பணியாளர்களுக்கு 01.12.2019 முதல் ஊதிய உயர்வு வழங்கப்பட வேண்டும். இதற்கான குழு அமைக்கப்பட்டும் பேச்சுவார்த்தை நடைபெறவில்லை என்பதை தங்களது கவனத்திற்கு கொண்டு வருகின்றோம். எனவே ஊதிய உயர்வு பேச்சு வார்த்தையை உடனடியாக துவங்க வேண்டுமென கேட்டுக்கொள்கிறோம்.

எனவே தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் அவர்கள் இக்கடித்தின் மீது உரிய நடவடிக்கை எடுத்து தொழில் அமைதியையும் தொழில் உறவையும் மேம்படுத்த வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறோம்.

நன்றி !

தங்கள் உண்மையுள்ள

தமிழ்நாடு மின்சார தொழிலாளர் சம்மேளனம்

கணக்காயர் களத் தொழிலாளர் சங்கம்

மின்கழக தொழிலாளர் முன்னேற்ற சங்கம்

தமிழ்நாடு மின் ஊழியர் மத்திய அமைப்பு(சிஐடியு)

மின்சார பிரிவு அண்ணா தொழிற் சங்கம்

மின்வாரிய ஜனதா தொழிற் சங்கம்

ஐ.என்.டி.யு.சி (சேவியர்)

ஐ.என்.டி.யு.சி For (சொர்ணராஜ்)

மின்வாரிய பொறியாளர் சங்கம்

தமிழ்நாடு மின் ஊழியர் காங்கிரஸ் (என்.எல்.ஓ)

தொழிலாளர் பொறியாளர் ஐக்கிய சங்கம்(HMS)

மின்வாரிய பொறியாளர் கழகம்

கணக்கு அலுவலர் சங்கம்

கார்டு பில்லிங் ஸ்டாப் யூனியன்

TNEB டாக்டர் அம்பேத்கர் எம்ப்ளாயீஸ் யூனியன்

மின்வாரிய இன்ஜினியர்ஸ் யூனியன்

எம்ப்ளாயீஸ் பெடரேஷன்

# மின்வாரிய தலைவருடன் பேச்சுவார்த்தை விபரம்

மின்வாரிய தலைவருடன் தொழிற்சங்க கூட்டு நடவடிக்கைக்குழுவின் சார்பாக பிரதானமான ஏழு கோரிக்கைகளை முன்வைத்து கடந்த 24.11.2021 அன்று பேச்சுவார்த்தை நடத்தினோம்.

- ★ மின்னகம் தொடர்பாக தொழிற்சங்கங்கள் தந்த ஆலோசனையின் பேரில் தீர்வு காண நடவடிக்கை எடுப்பதாக கூறினார்.
- ★ தளவாடப் பொருட்கள் தட்டுப்பாடு தொடர்பாக கோரிய பொழுது, மையப்படுத்தி கொள்முதல் செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக கூறினார். ஆனால் இது தேவையற்ற காலதாமதத்தை ஏற்படுத்துவதோடு, தற்போது நடைமுறையில் System சீர்குலைந்து விடும் என தெரிவித்தோம்.
- ★ மேற்கண்ட பிரச்சனையோடு தொடர்புடைய, செயற்பொறியாளரிலிருந்து மண்டல தலைமைப் பொறியாளர் வரை ஏற்கனவே உள்ள Delegation Power -ல் அனுமதிக்கப்பட்ட தொகையை குறைத்து வாரிய ஆணை 8, நாள் 17.08.2021-ன் மூலம் வெளியிடப்பட்ட உத்தரவினால் வாரியப் பணிகள் கடுமையாக பாதித்துள்ளதை சுட்டிக்காட்டினோம்.
- ★ மின்வாரியத்தில் மேற்பார்வை பொறியாளர் பதவி, செயற்பொறியாளர் பதவி, உதவி செயற்பொறியாளர் பதவி, நிர்வாகப் பிரிவில் பதவிகள், கணக்குப்பிரிவு பதவிகள், கணக்கீட்டுப்பிரிவு பதவிகள் வழங்கப்படாமல் இருப்பதை சுட்டிக்காட்டி பேசினோம். பதவி உயர்வுகள் வழங்க நடவடிக்கை எடுப்பதாக தெரிவித்தார்.
- ★ விருப்ப மாறுதல் விண்ணப்பங்களின் மீது வாரிய விதிகளின்படி நடவடிக்கை எடுத்து உத்தரவுகள் வெளியிட வேண்டுமென வலியுறுத்தினோம். நடவடிக்கை எடுப்பதாக கூறினார்.
- ★ புதியதாக உருவாக்கப்பட்ட துணை மின் நிலையங்கள், பிரிவு அலுவலகங்கள், ஆகிய இடங்களுக்கு பதவிகளை அனுமதித்திட வேண்டுமென வலியுறுத்தினோம். Redeployment செய்து பதவிகளை நிரப்புவதை கைவிட கோரினோம். நிதி நிலைமையை காரணம் காட்டி வாரியத்தலைவர் பேசினார். நாம் தொடர்ந்து வலியுறுத்தியதன் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கிறேன் என தெரிவித்துள்ளார்.
- ★ ஊதிய உயர்வு தொடர்பாக குழு அமைக்கப்பட்டும் பேச்சுவார்த்தை துவக்கவில்லை என தெரிவித்தோம். பேச்சுவார்த்தை துவங்க நடவடிக்கை எடுப்பதாக கூறினார்.

பேச்சுவார்த்தை திருப்திகரமாக இல்லாத காரணத்தால் வேறு வழியின்றி நவம்பர் 30-ல் கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம் நடத்துவது என முடிவு செய்தோம்.

# சிறப்பு நிலை முகவருக்கான பதவி உயர்வு வழங்க முதன்மை பட்டியல் தயாரித்தலுக்கு கால நிர்ணயம் சம்மந்தமான வழிகாட்டுதல் உத்திரவு

**TAMIL NADU GENERATION AND DISTRIBUTION CORPORATION LIMITED**
(ABSTRACT)

Establishment – RWE Category – Promotion to the post of Special Grade Foreman – Fixing up of Crucial Date for preparation of panel – Orders – Issued.

**(SECRETARIAT BRANCH)**

**(PER) CMD TANGEDCO PROCEEDINGS NO. 230** **DATED THE 20TH NOVEMBER, 2021.**
Karthigai-4, Pilava Varudam,
Thiruvalluvar Aandu-2052.

**READ:**

1. B.P.Ms.(Ch) No.212 (SB), dated 12.06.1987.
2. Memo.No.57393/P-1/87-2 (SB), dated 09.11.1987.

**PROCEEDINGS:**

In the Board's Proceedings first read above, orders were issued fixing crucial dates for preparation of panels for promotion to various posts which are being followed in Board Office Administrative Branch. Among others, orders were issued fixing crucial dates for preparation and finalization of panels for various categories upto the level of Foreman I Grade and its equivalent categories in the offices of the Superintending Engineers of Systems/Circles. Subsequently, orders were issued in Memo. second read above, modifying the said crucial dates as follows:

| Panel of officials for appointment of | Month in which panel has to be finalized |
|---|---|
| Foreman I Grade and equivalent categories | October |
| Line Inspector and equivalent categories | |
| Lineman and equivalent categories | November |
| Wireman and equivalent categories | |

**2.** It has been brought to the notice that due to non-availability of Crucial Date for preparation of panel of employees suitable for promotion to the post of Special Grade Foreman which came into existence subsequently, difficulties have arisen while finalizing the panels for the said category. The issue has been examined in detail and it has been decided to fix a suitable Crucial Date for preparation of panel for promotion to the post of Special Grade Foreman.

**3.** Accordingly, it is hereby ordered that the "**1st September**" every year, be fixed as Crucial Date for preparation of panel of employees fit for promotion to the post of Special Grade Foreman.

**(BY ORDER OF THE CHAIRMAN-CUM-MANAGING DIRECTOR)**

**A.MANIKKANNAN,**
**SECRETARY.**

# பதவி உயர்வுகள், விருப்ப மாறுதல்கள், தளவாட பொருட்கள் பற்றாக்குறை, காலிப்பணி இடங்கள் நிரப்பிட மற்றும் ஊதிய உயர்வு ஆகிய கோரிக்கைகளை முன்வைத்து தொழிற்சங்க கூட்டு நடவடிக்கை குழுவின் மாநிலந்தழுவிய கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம்




மின்வாரியத்தில் பதவி உயர்வுகளும், விருப்பமாறுதல் விண்ணப்பங்களின் மீதும் உரிய நடவடிக்கை எடுப்ப தில்லை. இதனால் பணப் பயன்கள் உரிய காலத்தில் சம்மந்தப்பட்ட பணியாளர் களுக்கு கிடைக்காமல் போ கிறது. இது குறித்து தொழிற் சங்கங்கள் தொடர்ந்து மின் வாரிய தலைமையிடமும், மின்துறை அமைச்சரிடம் பேசியும் பலன் ஏதும் இல்லை என்பது கவலை அளிக்கிறது.

மின் விநியோகப் பிரிவில் மூன்றும், இதர இடங்களில் 19-ம் என 22 மேற்பார்வை பொறியாளர் பதவிகள் காலிப்பணி இடங்களாக உள்ள நிலையில் பதவியின் தன்மையை உணர்ந்து நிரப்பாமல் இருப்பதும் சரியல்ல அதே போல 40-க்கும் மேற்பட்ட செயற்பொறியாளர் பதவிகளும், 100-க்கும் மேற்பட்ட உதவி செயற்பொறியாளர் பதவிகளும் பல மாதங்களாக காலிப்பணி இடங்களாக இருப்பதை அரசும், வாரியமும் கவனத்தில் கொள்ளாமல் இருக்கிறார்களே என்ற எண்ணம் ஏற்படுகிறது.

ஆறு மாதங்களாக நிர்வாக மேற்பார்வையாளரிலிருந்து உதவி நிர்வாக அலுவலர் பதவிகள் நிரப்பப்படவில்லை. இதனால் இரு காலாண்டு பணப்பயன்களை ஊழியர்களுக்கு கிடைக்கவில்லை. நிர்வாக பிரிவு மற்றும் கணக்குப் பிரிவில் இளநிலை உதவியாளராக பணியாற்றும் ஊழியர்களுக்கு இதே பாதிப்பு தான் கணக்குப்பிரிவு ஊழியர்களுக்கு, உதவியாளர் முதல் உதவி கணக்கு அலுவலர் வரை பதவி உயர்வுக்கான விவரங்கள் இருந்தும் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

அதே போல கணக்கீட்டாய்வாளரிலிருந்து வருவாய் மேற்பார்வையாளர் பதவி உயர்வுகள் வழங்குவதற்கு அனைத்து விபரங்கள் இருந்தும் கடந்த ஆறுமாதங்களாக தேவையற்ற காலதாமதத்தை மின்வாரிய நிர்வாகம் எடுத்ததன் விளைவு 700-க்கும் மேற்பட்ட வருவாய் மேற்பார்வையாளர் பதவிகள் காலிப்பணி இடங்களாக இருந்தும் அந்த பலனை அனுபவிக்க முடியாமல் வாரியத்திற்கு வருவாய் ஈட்டித்தரும் கணக்கீட்டுப்பிரிவு ஊழியர்கள் மனதளவில் சோர்ந்து போய் உள்ளனர்.

மின்வாரியத்தில் ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி 1 முதல் 20 வரையிலும் அதே போல ஜூலை 1முதல் ஜூலை 15 வரையிலும் விருப்ப மாறுதல் விண்ணப்பங்கள் அளிக்க வாரியத்தில் நடைமுறையில் உத்தரவுகள் உள்ளன. ஆனால் ஒவ்வொரு வருடமும் உரிய காலத்தில் ஆய்வுக்குட்படுத்தி விருப்ப மாறுதல் உத்தரவுகள் வெளியிடாமல் ஜூன் மற்றும் டிசம்பர் மாதங்களில் கடைசி நேரத்தில் வெளியிடுவதே வாரிய நிர்வாகம் வழக்கமாக கொண்டுள்ளது.

பதவி உயர்வு, இடமாறுதல் ஆகியவற்றில் நடவடிக்கை எடுக்க வேண்டிய தலைமைப்

பொறியாளர்/ பணியமைப்பு மௌனம் காப்பதேனோ!

மின்னகம் துவங்கிய பின்பு மின் தடைப்பு புகார்கள் மின்னகத்திற்கு வரவதால் உடனடியாக பணிகளை விரைந்து செய்ய வற்புறுத்தப்படுகிறது. நல்ல விஷயம். ஆனால் மின் தடையை சரியசெய்ய பியூஸ் ஒயர், கேபிள், ஜாயின்ட்கிட் கேபிள், காம்பவுண்ட் உள்ளிட்ட முக்கிய தளவாடப் பொருட்கள் இல்லாமல் எப்படி பணி செய்வான் தொழிலாளி.

தளவாட பொருட்களும் இல்லை, பணிசெய்ய போதுமான ஆட்களும் இல்லை. ஆனால் வேலையை மட்டும் விரைந்து செய்ய வேண்டுமாம். கொத்துக் கொத்தாய் தினம் ஒரு தொழிலாளி இறந்து கொண்டே இருக்கிறான்.

மின்வாரிய பணியாளர்களுக்கு 01.12.2019 முதல் ஊதிய உயர்வு வழங்கப்பட வேண்டும். அதற்கான குழு வாரியத்தால் அமைக்கப்பட்டும் ஒருமுறை கூட பேச்சு வார்த்தையை சங்கங்களோடு நடத்தவில்லை.

புதியதாக உருவாக்கப்பட்ட துணை மின் நிலையங்கள். பிரிவு அலுவலகங்கள், மண்டல தலைமை பொறியாளர் அலுவலகங்கள் மேற்பார்வை பொறியாளர் அலுவலகங்கள், ஆகியவற்றிற்கு புதிய பதவிகளை அனுமதிக்காமல் அவுட்சோர்சிங் முறையை புகுத்தி வருகிறது மின்சார வாரியம்.

இவைகளுக்கெதிரான தொழிலாளர் பொறியாளர் அலுவலர்களின் உள்ளக்குமறலை உணர்ந்த தொழிற்சங்க கூட்டு நடவடிக்கைக்குழு 30.11.2021 அன்று அனைத்து வட்ட மேற்பார்வை பொறியாளர் அலுவலகம் முன்பு வாரியத்தின், அரசின் கவனத்தை ஈர்க்கின்ற வகையில் கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டத்தை நடத்தமிட்டு மாநிலம் முழுவதும் வெற்றிகரமாக நடத்தினோம்.

மாநிலம் முழுவதும் அனைத்து வட்டங்களிலும் நமது தோழர்களின் முன்முயற்சியோடு எழுச்சியான கவனஈர்ப்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. சென்னை மின்வாரிய தலைமை அலுவலகத்தில் கூட்டு நடவடிக்கைக்குழுவில் இடம் பெற்றுள்ள தொழிற்சங்கங்கள் கலந்து கொண்டன.

இந்த நடவடிக்கைக்கு பின்பு மூன்றாம் நிலை பணியாளர்களுக்கான பதவி உயர்வுகள் வழங்கப்பட்டுள்ளன. ஆனால், பொறியாளர்களுக்கான பதவி உயர்வு இன்னும் காணல் நீராகதான் உள்ளது.

வாரியத்தின் நடவடிக்கையை பொறுத்திருந்து பார்ப்போம். அடுத்தக்கட்ட நடவடிக்கைக்கு திட்டமிடுவோம்.

---

# திருவண்ணாமலை கிளை சங்க அலுவலகத்தில் கூட்ட அரங்கம் அடிக்கல் நாட்டு விழா

திருவண்ணாமலை கிளை சங்க அலுவலக த்தில் உள்ள இடத்தில் 200 பேர் அமரக் கூடிய வகையில் புதிய கூட்ட அரங்கம் கட்டுவதற்கான அடிக்கல் நாட்டு விழா 7.11.2021 அன்று வட்ட தலைவர் கே. காங்கேயன் தலைமையில் நடைபெற்றது.

கிளை பொருளாளர் வி.எம். வெங்கடேசன் வரவேற்புரை நிகழ்த்தினார். மத்திய அமைப்பின் முன்னாள் நிர்வாகி தோழர் பெ. கண்ணன் செங்கொடியை ஏற்றினார். மத்திய அமைப்பின் பொதுச் செயலாளர் தோழர் எஸ். இராஜேந்திரன் அடிக்கல் நாட்டும் கல்வெட்டை திறந்து வைத்து சிறப்புரை ஆற்றினார்.

மாநில துணைத் தலைவர் தோழர் கே. அம்பிகாபதி, சிஐடியு மாவட்ட செயலாளர் தோழர் ஆர். பாரி, சிபிஐ(எம்) மாவட்ட செயலாளர் தோழர் சிவக்குமார், மண்டலச் செயலாளர் தோழர் ஆர். சிவராஜ், ஓய்வு பெற்ற நல அமைப்பின் தலைவர் தோழர் வி. மன்னார் உட்பட பல தலைவர்கள் வாழ்த்திப் பேசினர்.

ஓய்வு பெற்ற தோழர்கள் செங்கல் வழங்க கிளைச் செயலாளர் தோழர் எம். பாலாஜி பெற்றுக் கொண்டார் கட்டிட கமிட்டி பொருளாளர் தோழர் ஆ. குருதேவன் நன்றி கூறினார். இந்நிகழ்ச்சியில் ஏராளமான மின்ஊழியர்கள் பங்கேற்றனர்.

# கோமாளி ஆட்சியில்...



2021 நவம்பர் 15 அன்று மத்திய பிரதேச மாநிலம் போபாலில் அம்மாநில முதலமைச்சர் சிவராஜ்சிங் சௌகான் விஞ்ஞான பூர்வமான கருத்தை தெரிவித்துள்ளார். அந்த கருத்தைக்கண்டு நாசா விஞ்ஞானிகளே அதிர்ந்து போய் உள்ளனர். அந்த கருத்தானது இந்தியாவை உலக அரங்கில் எவ்வளவு தரம் தாழ்ந்த நாடாக பார்க்கப்படும் என்று கூட அறியாமல் மாநில முதலமைச்சர் பேசியது பெரிய சர்ச்சையை உருவாக்கியுள்ளது. சில ஆண்டுகளுக்கு முன்பாக இதே போல பசுமாட்டின் கோமியம் குடித்தால் நோய்கள் வராது என்றும், நோய் வந்தவர்களுக்கு நோய் விலகும் என்றும் ஒரு சர்ச்சயை ஏற்படுத்தினர். அதற்கு இந்திய விஞ்ஞானிகள் கழகமும், அகில உலக விஞ்ஞானிகள் கழகமும் கடும் எதிர்ப்பை தெரிவித்தது. நிரூப்பிக்கப்படாத ஒன்றை அரசின் தலைமை பாத்திரத்தில் இருப்பவர்கள் பேசுவது, பிரச்சாரம் செய்வது என்பது ஏற்க இயலாது. இது அறிவியலுக்கு எதிரான செயல் என்றும், மக்கள் யாரும் இதை நம்ப வேண்டாம் என்றும் விஞ்ஞானிகள் அறிக்கை விட்டனர்.

இந்த நிலையில் 2021 நவம்பர் 21-ல் மத்திய பிரதேசம் போபாலில் இந்திய கால்நடை மருத்துவ சங்கம் சார்பில் **"சக்தி 2021"** என்ற தலைப்பில் பெண் கால்நடை மருத்துவர்கள் மாநாடு நடைபெற்றது. இதில் கலந்து கொண்ட மாநில முதலமைச்சர் சிவராஜ்சிங் சௌகான் தெரிவித்திருப்பதாவது மாட்டுச்சாணம், கோமியம் மூலம் நாட்டில் பொருளாதாரம் உயரும் என்று பேசி உள்ளார். இதற்கு ஒருபடி மேல் சென்று மாட்டுச்சாணத்தை அரசே கொள்முதல் செய்ய திட்டமிட்டுள்ளது என்று தெரிவித்துள்ளார். இந்த செய்தியை படித்த பொழுது தமிழகத்தின் தெர்மாக்கோல் விஞ்ஞானி ஞாபகமே நமக்கு வருகிறது. நோய்களுக்கு தீர்வு சொல்லும் மருந்துகள் என்பது விஞ்ஞான ஆய்வுக்கு உட்பட்டது. அந்த மருந்துகள் முதலில் ஆய்வகத்தில் தயாரிக்கப்பட்டு எலிகளுக்கும், பூனைகளுக்கும் கொடுத்து சோதிக்கப்பட்டு அதன் பிறகு மருத்துவ கழகத்தால் அங்கீகரிக்கப்பட்டு அதன் பிறகே மக்களின் பயன்பாட்டுக்கு கொண்டு வர முடியும். இந்த விஞ்ஞான முறையில் பாஜகவினர் சொல்லும் மாட்டுச்சாணமும், கோமியமும் நிரூபிக்கப்படவில்லை என்பதை அவர்கள் முதலில் புரிந்து கொள்ள வேண்டும். அறிவியலால் நிரூப்பிக்கப்படாத ஒன்றை அரசின் தலைமை பாத்திரத்தில் இருப்பவர்கள் ஆதரிப்பதோ, பிரச்சாரம் செய்வதோ தவறு என்று கூட அறியாமல் இவ்வாறு செய்வது அவர்களின் பிற்போக்குத்தனத்தை மூடநம்பிக்கையின் உச்சத்தை தெரிவிப்பதாகவே அறியமுடிகிறது.

பசு மாட்டுச்சாணமும் கோமியமும் எதிர்ப்பு சக்தியை கொண்டது என்றால் கொரானாவால் பாதிக்கப்பட்ட பாஜகவினர் ஏன் ஆங்கில மருத்துவத்தை எடுத்துக் கொள்ள வேண்டும். கொரானா கதையை சொல்லி அதில் வரும் கதாபாத்திரங்களை கடவுளாக்கி அறியாமையில் உள்ள மக்களை மேலும் அறியாமை இருளில் தள்ளி சமூகத்தை பின்னோக்கித் தள்ளுகின்ற பாஜக, ஆர்.எஸ்.எஸ். நடவடிக்கையை மக்கள் ஒரு போதும் ஏற்றுக்கொள்ள போவதில்லை. விஞ்ஞானத்தின் முன்பாக அனைத்து மூட நம்பிக்கைகளும் தோற்றுப்போவது உறுதி. இது தான் கடந்த கால வரலாறு, நிகழ்கால வரலாறு மற்றும் எதில்கால வரலாறாக இதுவாகவே இருக்கும்.

கோமாளிகள் ஆட்சியில் இருக்கும் வரை இது போன்ற நகைச்சுவைகள் அவ்வப்போது வரும். இவர்களை ஆட்சிக்கட்டிலில் இருந்து அகற்றும் வரை இது போன்ற கோமாளி தனங்கள் இருக்கவே செய்யும்.

விஞ்ஞானம் அதை எளிதில் வெற்றி கொள்ளும்!

**- தி.ஜெயசங்கர்**



# தோழர் வி.துளசிதாஸ்

## காலமானார்

போராட்டமே வாழ்க்கையாய் வாழ்ந்த மகத்தான தலைவர் தோழர் வி. துளசி தாஸ் 09.11.2021 அன்று கோவையில் காலமானார். 1963 ஆம் ஆண்டில் துவங்கப்பட்ட மேல் ஆழியார் அணை கட்டுமான பணிகள் 1967 ஆம் ஆண்டில் பாதி அளவு நிறைவேறிய நிலையில் 450 பேர்களை அன்று இருந்த நிர்வாகம் வேலை நீக்கம் செய்வதாக நோட்டீஸ் கொடுத்து வெளியேற்றியது.

மின் வாரிய பணிகளில் இருந்த மறைந்த அருமை தோழர் கே சி கருணாகரன் துளசிதாஸ் ஆகியோர் வால்பாறை திராவிட முன்னேற்றக் கழக சட்டமன்ற உறுப்பினராக இருந்த அக்காமலை இராமசாமி அவரிடம் முதலமைச்சரை சந்தித்து இந்த உத்தரவை ரத்து செய்ய வேண்டும் என்று கோரிக்கை வைத்தனர். திரு ராமசாமி அணை கட்டு தொழிலாளர் முன்னேற்ற சங்கத்தின் தலைவராக இருந்து செயல்பட்டு வந்தார்.

தொடர்ந்து உண்ணாவிரதம் போராட்டங்கள் நடைபெற்ற நிலையில் அணைக்கட்டு தொழிலாளர் முன்னேற்ற சங்கம் உறுதியாக நிற்காத நிலையில் அன்றைக்கு பிரச்சனைக்கு தீர்வு காண கோவை நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த தோழர் . கே. ரமணி அவர்களை சந்தித்து இந்த அமைப்பிற்கு பொறுப்பேற்க வேண்டும் என தோழர் கே சி கருணாகரன் அவர்களும் துளசிதாஸ் அவர்களும் வற்புறுத்தியது வரலாறு.

முப்பத்தி ஒரு நாட்கள் நடைபெற்ற போராட்டத்தில் மறியல் உண்ணாவிரதம் என்ற ஆவேச கனலாய் தோழர்களின் போராட்டத்தை தங்க முடியாத அன்றைய திமுக அரசு பெண்கள் கைக்குழந்தைகள் உட்பட ஆயிரத்து 700 பேரை கைது செய்தது. ஆண்களை கோவை மத்திய சிறையிலும் பெண்களை வேலூர் சிறையிலும் அடைத்து வைத்தனர்.

இறுதியாக அன்றைய திமுக அரசு நீர் மின் திட்டத்தில் பணியாற்றிய 277 பேர்களை பல்வேறு திட்டங்களுக்கு இடமாற்றம் செய்து பணி நியமனம் வழங்கினார்கள்.புதிய இடத்திற்கு செல்ல 3 நாட்கள் அவகாசமும் முன்பணமும் வழங்கப்பட்டது. வேறு இடங்களுக்கு வேலைக்கு செல்ல விருப்பம் இல்லாத 202 ஊழியர்கள் இழப்பீடும் பெற்றனர்.

இந்த ஒப்பந்தத்தை ஏற்படுத்த அன்று மார்க்சிஸ்ட் கட்சியின் கோவை சட்டமன்ற உறுப்பினராக இருந்த கோவை தோழர் எம் பூபதி அவர்களோடு தோழர் கே.ரமணி அவர்கள் எடுத்த முயற்சி அரசு மருத்துவமனையில் இந்த ஒப்பந்தத்தின் நகலை மின்வாரிய நிர்வாகம் கொடுக்க வேண்டிய சூழலை உருவாக்கியதில், அந்தப் போராட்டத்தை நடத்துவதில் தோழர் வி துளசிதாஸ் அவர்களின் பங்கு மகத்தானது .

போராட்டத்தில் காவல்துறையினர் வாகனத்தில் தோழர் வி. துளசிதாஸ் அவர்களை அடித்து துவைத்து வீசப்பட்ட பொழுது "தண்ணீர், தண்ணீர்" என்று கதறிய பொழுது கொடூர மனம் படைத்த காவல்துறையினர் சிறுநீரை அவரது மூஞ்சியில் அடித்தனர். அத்தனை கொடுமைகளையும் தாண்டி சித்திரவதைகளை அனுபவித்து செங்கொடி இயக்கத்தை பலப்படுத்தியவர் அருமைத் தோழர் வி. துளசிதாஸ்.

பழிவாங்கும் நடவடிக்கையாக தூத்துக்குடிக்கும், எண்ணூர்க்கும் இடம்மாற்றம் செய்யப்பட்ட போது, அங்கெல்லாம் செங்கொடியை ஏற்றி அமைப்பை பலப்படுத்தியவர்.

தனது மூன்று மகன்கள் உடல் அளவில் பாதிக்கப்பட்டு இருந்த சூழலிலும் தனது சேமிப்பு பணத்தையும் 40 லட்சம் பெறுமானமுள்ள தனது வீட்டையும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிக்கு உயில் எழுதி நமது அரசியல் தலைமைக்குழு உறுப்பினர் தோழர் ஜிஆர் இடம் வழங்கிய தோழர்.

தோழர் வி துளசிதாஸ் அவர்களின் மறைவு மின் ஊழியர் மத்திய அமைப்பு மட்டுமல்ல மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியையும் தொழிற்சங்கத்தை நேசிக்கும் அத்தனை தோழர்களுக்கும் மிகப்பெரிய இழப்பாகும். அவரது மறைவு செய்தி கேட்டதும், மத்திய அமைப்பின் பொதுச்செயலாளர் தோழர் எஸ். இராஜேந்திரன், மாநில துணைத் தலைவர் தேழர் டி.கோபாலகிருஷ்ணன், கோவை தெற்கு கிளையின் நிர்வாகிகள், தோழர்கள் காளிமுத்து, பத்மநாபன், டி.பழனிசாமி ஆகியோர் நேரில் சென்று செவ்வணக்கம் செலுத்தினர்.

அவரை இழந்து வாடும் அவரது மனைவி மற்றும் மூன்று மகன்கள், இரண்டு மகள்கள் மற்றும் தோழர்கள் அனைவருக்கும் தமிழ்நாடு மின் ஊழியர் மத்திய அமைப்பின் சார்பாக ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறோம்.




# மக்களின் மனசாட்சியை உலுக்கிய ஜெய்பீம் திரைப்படம்!

சமீபத்தில் ஜெய்பீம் திரைப்படத்தை அமேசான் இணைய தளத்தில் பார்க்க நேர்ந்தது. திரைப்படத்தின் துவக்க காட்சிமுதல் இறுதி வரையில் ஒடுக்கப்பட்ட மக்களின் மனசாட்சியாக திரைப்படம் இருந்தது. காட்சிகளை காணும் பொழுது ஒவ்வொருவரும் தங்களது நிஜ வாழ்க்கையில் கிராமத்தில் ஜாதிய கட்டமைப்பில் பார்த்த காட்சிகள் நினைவுக்கு வரும் அந்த அளவிற்கு காட்சிகள் தத்ரூபமாக காட்டியுள்ளனர். வயல்வெளியில் எலிகளை பிடிப்பதும், வீட்டிற்குள் பாம்பை பிடித்ததுமான காட்சி அமைப்பு அது காட்சியல்ல இருளர் இன மக்களின் வாழ்வியல் முறை என்பதை கச்சிதமாக எடுத்துக்காட்டியுள்ளது. கிராமத்திற்கு வெளியே குடிசை அமைத்து வாழ்வதும், கிராமத்திலுள்ள உயர்குடி மக்களின் தயவில் இவர்களின் வாழ்க்கை அமைந்ததும் கற்பனைக் காட்சியல்ல, அது அவர்களின் நிஜ வாழ்க்கையாகும். இவர்களின் வாழ்க்கையில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டிய அரசு, உதவி செய்ய வேண்டிய பிற துறைகள் இவர்களை மண்புழுவாய் பார்த்து ஏளனம் செய்தது. இது ஜாதிய சமூகத்தின் அழுக்கை பறைசாற்றுவதாய் அமைந்தது. இது செல்லரித்துப்போன மூட நம்பிக்கைகளை கொண்ட இந்துத்துவ ஜாதீய கட்டமைப்பில் ஆண்டான் அடிமை சமூகத்தின் மிச்சசொச்சமாகும். இது நீண்ட நாட்களாக திட்டமிட்டு செய்து வந்த கட்டுமானமாகும். இப்படியொரு விஷயம் என்பது 1995-ம் ஆண்டில் நடந்தது என்று, திரைப்படமாக இன்று வெளிவந்த பிறகு சமூகத்தின் பார்வைக்கு இது புதிய விஷயமாக தென்படுகிறது. உண்மையில் இன்றளவும் ஜாதிய கட்டமைப்பும், ஜாதிகளில் பேதம் பார்ப்பதும் தொடர்கதையாகவே உள்ளது.

இன்றளவும் கூட பழங்குடியின மக்களுக்கு, மலைவாழ் மக்களுக்கு பட்டியலின மக்களுக்கு அரசின் சலுகைகள் பல கிராமங்களில் கிடைப்பதில்லை. ரேஷன் அட்டைக்கூட கிடைக்காத மக்கள் வாழ்ந்து வருகின்றனர் என்பது உண்மையயே. இப்பப்படிப்பட்ட அடிப்படையான பிரச்சனைகளில் ஒன்றிய அரசும், மாநில அரசும் கவனம் செலுத்தாமல் இருந்ததும், இருப்பதும் முதலாளித்து கோட்பாட்டின் முக்கிய அம்சமாகும். சமூகத்தில் மிகவும் பின் தங்கிய மக்களை அரசு தூக்கி விட்டால், அவர்களை கல்வி, வேலை, பொருளாதாரம் ஆகியவற்றில் வலிமையானவர்களாக மாற்றி விட்டால் ஜாதிய கட்டமைப்பும், உயர்வு தாழ்வு பேதமும் உடைந்து போகும் என்பதனாலே அவர்களை இன்றும் அப்படியே வைத்துக் கொண்டுள்ளது இந்துத்துவ ஜாதிய கட்டமைப்பு. அதில் நன்கு படித்தவர்களும் தனக்கு கீழேயுள்ள ஒரு ஜாதியை தாழ்த்தி தான் உயர்ந்தவர்களாக காட்டிக்கொள்ளும் பொய்யான சமூகத்தில் வாழ்ந்து வருகின்றனர்.

முற்போக்கு சிந்தனையாளர்கள், சமூக ஆர்வலர்கள், மக்களை நேசிக்கின்ற மனித நேயமுள்ளவர்கள், மற்றும் கம்யூனிஸ்ட்களால் ஜெய்பீம் திரைப்படம் கொண்டாடப்படுகிறது. இருளர் இன மக்களின் பிரச்சனைகளை மக்கள் மன்றத்திற்கு கொண்டு சென்று பிறகு நீதிமன்றத்தின் மூலமாக நீதியை பெற்றுத்தந்தவர்கள் கம்யூனிஸ்டுகள் என்று ஜெய்பீம் படக்குழுவினர் பதிவு செய்துள்ளார்கள்.

ஜெய்பீம் திரைப்படத்தை அனைவரும் பார்க்க வேண்டும். ஜாதிகள் அற்ற, ஏற்றத்தாழ்வுகள் அற்ற மனித சமூகத்தை படைப்பதற்காக நாம் அனைவரும் செயல்படுவோம்.

**- தி.ஜெயசங்கர்**

# 2022 ஆம் ஆண்டு விடுமுறை நாட்கள்

| | | | |
|---|---|---|---|
| ஜனவரி | 1 | சனி | ஆங்கிலப் புத்தாண்டு |
| ஜனவரி | 14 | வெள்ளி | பொங்கல் திருநாள் |
| ஜனவரி | 15 | சனி | திருவள்ளுவர் தினம் |
| ஜனவரி | 16 | ஞாயிறு | உழவர் திருநாள் |
| ஜனவரி | 18 | செவ்வாய் | தைபூசம் |
| ஜனவரி | 26 | புதன் | குடியரசு தினம் |
| ஏப்ரல் | 2 | சனி | தெலுங்குவருட பிறப்பு |
| ஏப்ரல் | 14 | வியாழன் | தமிழ்வருட பிறப்பு மற்றும் |
| | | | Dr. B.R. அம்பேத்கர் பிறந்த தினம் |
| ஏப்ரல் | 15 | வெள்ளி | புனித வெள்ளி |
| மே | 1 | ஞாயிறு | மே தினம் |
| மே | 3 | செவ்வாய் | ரம்ஜான் |
| ஜுலை | 10 | ஞாயிறு | பக்ரீத் |
| ஆகஸ்ட் | 9 | செவ்வாய் | முகரம் |
| ஆகஸ்ட் | 15 | திங்கள் | சுதந்திர தினம் |
| ஆகஸ்ட் | 19 | திங்கள் | ஸ்ரீகிருஷ்ணஜெயந்தி |
| ஆகஸ்ட் | 31 | புதன் | விநாயகர் சதுர்த்தி |
| அக்டோபர் | 02 | ஞாயிறு | காந்தி ஜெயந்தி |
| அக்டோபர் | 04 | செவ்வாய் | ஆயுத பூஜை |
| அக்டோபர் | 05 | புதன் | விஜயதசமி |
| அக்டோபர் | 09 | ஞாயிறு | மிலாடி நபி |
| அக்டோபர் | 24 | திங்கள் | தீபாவளி |
| டிசம்பர் | 25 | ஞாயிறு | கிறிஸ்துமஸ் |



பதவி உயர்வுகள், விருப்ப மாறுதல்கள், தளவாட பொருட்கள் பற்றாக்குறை, காலிப்பணி இடங்கள் நிரப்பிட மற்றும் ஊதிய உயர்வு ஆகிய கோரிக்கைகளை முன்வைத்து தொழிற்சங்க கூட்டு நடவடிக்கை குழுவின் சார்பில் பெரம்பலூர் மின்வட்ட மேற்பார்வை பொறியாளர் அலுவலகம் முன்பு ஆர்ப்பாட்டம்

## பதவி உயர்வுகளை நிரப்பிட விருப்ப மாறுதல் உத்தரவு வழங்கிட
## தடையில்லா மின்சாரம் – தளவாட பொருட்கள் வழங்கிட, ஊதிய உயர்வு பேச்சு வார்த்தை உடன் துவங்கிட
## கோரிக்கைகளை வலியுறுத்தி மாநிலம் முழுவதும் இணைப்புக்குழு சார்பில் ஆர்ப்பாட்டம்
## 30.11.2021


















Registered with Registrar of News Paper for India TNTAM/2015/62075
Postal Registration No. TN/CH(C) 514/2021 - 2023
Licensed to Post without pre-payment No. TN/PMG(CCR)/WPP/528/2021 - 2023
Posted at Egmore RMS-1 (Patrika Channel) Date of Publishing First week of every month
Posted on 5 to 9 every month Date of Posting 09.12.2021

## பதவி உயர்வுகளை நிரப்பிட விருப்ப மாறுதல் உத்தரவு வழங்கிட தடையில்லா மின்சாரம் – தளவாட பொருட்கள் வழங்கிட, ஊதிய உயர்வு பேச்சு வார்த்தை உடன் துவங்கிட கோரிக்கைகளை வலியுறுத்தி மாநிலம் முழுவதும் இணைப்புக்குழு சார்பில் ஆர்ப்பாட்டம்

30.11.2021













Published by S.S.SUBRAMANIAN on behalf of Central Organisation of Tamil Nadu Electricity Employees
Published from No. 27, Mosque Street, Chepauk, Chennai-600 005. and Printed by N.SRINIVASAN
at Vaigai Printers and Publishers 2/38, Potters Street, East Jones Road, Saidapet, chennai - 600 015.
Editor S.S.Subramanian